janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 ஏப்ரல் 09 - மாதம் 15 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 01




## திருச்சியில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்ற

# மாபெரும் எழுச்சி மாநாடு



### எங்கே எனது வேலை?

### தொடர் பரப்புரை இயக்கம்





**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்ட மாவீரன் பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23 ந்தேதி துவங்கி, தமிழ்நாட்டின் பகத்சிங்காக இளைஞர்களால் போற்றப்படும் தியாகசெம்மல் பாலன் பிறந்தநாளான ஏப்ரல் 2 வரை எங்கே எனது வேலை? எனும் முழக்கத்தோடு இளைஞர் எழுச்சி தொடர் பரப்புரை பயணம் சென்னை, ஓசூர், கன்னியாகுமரி, வேதாரண்யம் ஆகிய நான்கு முனைகளில் துவங்கி மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.**

தமிழ்நாடு முழுவதும் 37 மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களில் இப்பயணக் குழுக்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நகர்ப்புற பகுதிகளில் மேள தாளத்துடன் நடைபயணமாக சென்ற பயணக்குழுவுடன் ஆங்காங்கே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு எங்கே எனது வேலை? என முழக்கமிட்டனர்.

இப்பயணக்குழுக்கள் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் பயணம் செய்தது.

பயணக்குழுவை வரவேற்று ஆயிரக்கணக்கான சுவர் விளம்பரங்களும், டிஜிட்டல் விளம்பரங்களும், சுவரொட்டி ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

பயணக்குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுமார் 2லட்சம் துண்டறிக்கைகளை மக்கள் மத்தியில் விநியோகித்ததோடு, எங்கே எனது வேலை? சிறுநூல் வெளியீட்டையும் பல்லாயிரக்கணக்கில் விற்பனை செய்தனர்.

பயண நிறைவாக இளைஞர் எழுச்சி மாநாடு திருச்சி மாநகரில் மிகப்பிரம்மாண்ட ஏற்பாடுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டில் தூத்துக்குடி அமரர் கைலாசமூர்த்தி கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகளும், திருச்சி பாரதி கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மாநாட்டில் கொட்டும் மழையிலும் 37 மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டிற்கு மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் தலைமை தாங்கினார்.

தேசியக்குழு உறுப்பினர்கள் எம்.பார்த்தீபன் இரா.ரமேஷ், கலை. அஸ்வினி, ஆர்.பவிதாரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எம்.செல்வக்குமார் வரவேற்புரையாற்றினார். மாநாட்டை துவக்கி வைத்து இளைஞர் பெருன்ற பொதுச்செயலாளர் இரா. திருமலை உரைநிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலசெயலாளர் இரா.முத்தரசன் சிறப்புரையாற்றினார்.

இளைஞர் பெருமன்ற மாநிலசெயலாளர் க.பாரதி மாநாட்டு தீர்மானத்தை முன்மொழிந்து உரைநிகழ்த்தினார்.

மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன், நாகப்பட்டிணம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம்...

மாநிலசெயற்குழு உறுப்பினர்கள் டி.எம்.மூர்த்தி, க.சந்தானம், எம்.ரவி, வை.சிவபுண்ணியம், திருத்துறைப்பூண்டி

தொடர்ச்சி 15ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# இம் என்றால் சிறைவாசம்! ஏன் என்றால் வனவாசமா?



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. விடுதலைப் பெற்ற சுதந்திர நாட்டை வழி நடத்திட அண்ணல் அம்பேத்கர் உருவாக்கித் தந்திட்ட அரசியலமைப்பு சட்டம் உள்ளது.**

அரசியல் சட்டமானது நாடு நல்வழி பாதையில் சென்றிட பல்வேறு அமைப்புகளை உருவாக்கித் தந்துள்ளது.

தேர்தல் ஆணையம், நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், யூனியன் பிரதேசங்கள், நீதிமன்றங்கள் – காவல்துறை, ராணுவம், மாநிலங்கள் – மாவட்டங்கள் – வட்டங்கள் – ஒன்றியங்கள் என்ற அமைப்புகள்.

சிற்றூராட்சி – வட்டார ஊராட்சி, மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்ற அமைப்புகள்.

இவைகளை நிர்வகிக்க, நிர்வாக அமைப்புகள் – மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், உறுப்பினர்கள் கூடி நிர்வாக அமைப்பிற்கான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.

உறுப்பினர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் அமைப்பில் சுதந்திரமாக கருத்துக்கள் தெரிவிப்பதற்கான வாய்ப்புகள். அவைகள் அவை அல்லது மன்றம் முடிவுகள் எடுத்திடும் முறை இவைகள் குறித்து எல்லாம் மிகத் தெளிவான வழிகாட்டுதலை நமது அரசியலமைப்புச்சட்டம் வழிகாட்டுகிறது.

கருத்துச் சுதந்திரம் குறித்து குறிப்பிடும் நமது அரசியலமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக கூறுகின்றது.

“இந்திய குடிமகன் ஒவ்வொருவரும் சுயமாக சிந்தித்து, முடிவெடுக்க, அதனை வெளிப்படுத்திடும் வகையில் ஏடுகளில் எழுத, கூட்டங்களில் பேச உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.”

குடியரசுத் தலைவரை, பிரதமரை, ஒன்றிய அமைச்சர்களை, முதலமைச்சர்களை, அமைச்சர் பெருமக்களை, அரசியல் தலைவர்களை விமர்சிக்க நமக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

கருத்துக்களை, விமர்சனங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, அவைகளை உறுதிப்படுத்திட அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல, வலியுறுத்த ஜனநாயக முறையில் ஆயுதங்கள் இன்றி உண்ணாநோன்பு, ஆர்ப்பாட்டம், தர்ணா, மறியல், வேலை நிறுத்தம், முழு அடைப்பு என பல்வேறு வடிவங்களில் இயக்கங்கள் நடத்திட, போராட நமக்கு உரிமை உண்டு என்று நமது அரசியலமைப்புச் சட்டம் நமக்கு உரிமைகளை வழங்கியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளைப் பறிப்பதற்கு எவருக்கும் அதிகாரமும் இல்லை; உரிமையும் இல்லை.

நாட்டை ஆட்சி செய்திடும் அதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பா.ஜ.க. பெற்றிருக்கலாம்.

மக்கள் அளித்திட்ட தீர்ப்பால், தங்களுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை தவறான முறையில், அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பான முறையில் செயல்பட முனைவது, அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயலாகும்.

‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ என்ற நிலை குடிமகனுக்கு மட்டுல்ல; குடிமக்களை ஆளுவோருக்கும் அது பொருந்தும்.

அரசியலமைப்புச் சட்டத்தை மீறினால், அதற்கு எதிராக செயல்பட்டால், அது தேசவிரோத செயல் எனில், அரசு மீறினால் அது என்ன தேசபக்தியா?

குடிமக்களை வழிநடத்திட வேண்டிய அரசு, அதன் செயல்பாடுகள் அனைத்தும் முன்னுதாரணமாக இருந்திடல் வேண்டும்.

நம் நாடு ஏற்றுக்கொண்ட கொள்கை என்பது ஜனநாயகம் – சமத்துவம் என்ற மகத்தான கொள்கை. இதற்குப் புறம்பாக, எதிராக ஆட்சியாளர்கள் செயல்பட அதிகாரம் அளித்தது யார்?

பா.ஜ.க.விற்கு வாக்களித்த மக்கள் அரசியலமைப்புச் சட்டத்தை மதித்து செயல்பட வேண்டும் என்றுதான் வாக்களித்தார்கள். சர்வாதிகார முறையில் செயல்பட வாக்களிக்கவில்லை.

வாக்குகளை பெறும் வரையில் வாக்காளர்களை எஜமான்கள் என்று போற்றியவர்கள், வாக்குகளை பெற்று அதிகாரத்திற்கு வந்த பின்னர், மக்களை தங்களின் அடிமைகள் என்று ஏளனமாகக் கருதி, ஏறி வந்த ஏணியை எட்டி உதைத்திடும் கொடுமையை மேற்கொள்ளலாமா?

ஜனநாயகம் குறித்து மேடைதோறும் முழங்குபவர்கள், – மக்கள் நலனுக்கு முன்னேற்றத்திற்காக நாள்தோறும் உழைத்து வருகின்றோம் என்று உரக்கக் கத்தி பேசுபவர்கள் – தங்களின் பேச்சுக்கும், செயலுக்கும் பொருத்தமற்ற முறையில் எதிர்நிலை எடுத்து செயல்படலாமா?



நாடே ஏற்றுக் கொண்டுள்ள ஜனநாயகத்திற்கு புறம்பாக – ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகாரப் பாதையை ஆட்சியாளர்கள் மேற்கொள்வது எங்ஙனம்?

தங்களிடத்தில் ஆட்சி அதிகாரம்இருக்கும் காரணத்தால் ஆட்சியாளர்களை, தலைமை தாங்குபவர்களை விமர்சிக்கக் கூடாதா?

குறிப்பாக இன்றைய ஒன்றிய அரசின் தலைமை அமைச்சராக இருப்பவர் திரு . நரேந்திர மோடி.

நாம் உட்பட நாட்டில் வாழும் 140 கோடி மக்களுக்கும் அவர்தான் பிரதமர்.

அவர் வகிக்கும் நாட்டின் மிக உயர்ந்த பொறுப்பிற்கு நாம் அனைவரும் மதிப்பளித்திடல் வேண்டும் – ஆம் அவர் நமது நாட்டின் பிரதமர் என்கிற முறையில் நாம் மதித்திட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது.

அதே நேரத்தில் அவரை விமர்சிக்கவும் நமக்கு உரிமை உண்டு என்பதிலும் இரு வேறு கருத்துகளுக்கு இடம் இருக்க முடியாது!

ஆனால் நம் பிரதமர் என்ன விரும்புகிறார் என்றால், அவரை மதித்திடல் வேண்டும் என்ற ஒன்றை ஏற்கிறார், வரவேற்கவும் செய்கின்றார்!

ஆனால் அவரை விமர்சிப்பது என்ற மற்றொன்றை நிராகரிக்கின்றார்!

இருவழி பாதையை நிராகரித்து ஒரு வழி பாதை மட்டும்தான் என்று கூறுகின்றார்.

நாட்டின் பிரதமர் நேரு உள்ளிட்ட அனைத்து பிரதமர்களையும் நாடு விமர்சனம் செய்துள்ளது.

தேசபக்தியில் முன்னணி படை வீரனாக பணியாற்றிய நேருவை பார்த்து சீனாவின் கைக்கூலி என்று விமர்சித்தனர்.

நாட்டின் பிரதமராக இருந்த இந்திரா காந்தியை பார்த்து முண்டச்சி என்று விமர்சித்த தலைவர்கள் உண்டு.

கொள்கை ரீதியாகவும் – தனிப்பட்ட முறையிலும் கூட பல பிரதமர்களும், அரசியல் தலைவர்களும் விமர்சிக்கப்பட்டது உண்டு.

அத்தகைய விமர்சனங்களை அவரவர் அரசியல் ரீதியாக எதிர்கொண்டார்களே தவிர அடக்குமுறைகளை ஏவி விடவில்லை.

இன்றைய பிரதமர் மோடியின் மீது நாட்டு மக்கள் எத்தகைய விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என்பதை எண்ணி பார்த்திட வேண்டும்!

இல்லாத – பொல்லாத ஒன்றை பிரதமர் மீது கூறவில்லை – கூற வேண்டிய அவசியமும் இல்லை – உண்மையை பேசுகின்றார்கள், உரக்க கேட்கவும் செய்கின்றனர்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் – ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பரிந்துரைப்படி – நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்!

பிரதமர் தனது தேர்தல் பரப்புரையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால்...

1. ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை கொடுப்போம்! என்று கூறினாரே, அதனை ஏன் நிறைவேற்றவில்லை?

2. வேலை வழங்கவில்லை என்பது மட்டுமல்ல, வேலையில் இருப்பவர்களை பல்லாயிரக்கணக்கில் வெளியேற்றி வருவது ஏன்?

3. வேலையின்மையாலும், வேலை பறிப்பாலும் நாட்டில் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்ததற்கு யார் பொறுப்பு?

4. வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்பு பணம் அனைத்தும் மீட்கப்படும் – அவ்வாறு மீட்கப்படும் பணத்தை நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15 லட்சம் வீதம் பங்கிட்டு அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்ற வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை?

5. நாட்டில் வாழும் மக்களின் பெரும்பகுதியினர் பங்கேற்று, உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கி, நாடு தன்னிறைவு பெற காரணமாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு எதிராக, நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்களுக்கு எதிராக, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், ஏறத்தாழ 15 மாத காலம் தலைநகர் டெல்லியில் குவிந்து போராட்டம் நடத்தினர்.

700க்கும் மேற்பட்டோர் மரணம் என்று தொடர்ந்த நிலையில் – மூன்று சட்டங்களையும் திரும்பப்பெற்று, விவசாயிகளின் கோரிக்கைகளான, விலை நிர்ணய சட்டம் உள்ளிட்ட சட்டங்களை நிறைவேற்றிட எழுத்துப் பூர்வமாக எழுதிக் கொடுத்திட்ட வாக்குறுதிகள் இந்நாள்வரை நிறைவேற்றப்படவில்லையே ஏன்?

6. நாடு விடுதலை பெற்ற நாள் தொட்டு, பிரதமராக பொறுப்பேற்று செயல்பட்ட அனைத்து பிரதமர்களும் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினார்கள். ஆனால் தற்போது பிரதமராக உள்ள மோடி ஒரு பொதுத்துறை நிறுவனத்தைக் கூட உருவாக்கவில்லை.

மாறாக 23 பொதுத்துறை நிறுவனங்களை கடந்த 9 ஆண்டு காலத்தில் அடிமாட்டு விலைக்கு தனியாருக்கு விற்பனை செய்தது யார் நலனை பாதுகாக்க?

7. நாட்டு மக்களுக்கு சொந்தமான தேசவுடைமை வங்கிகளின் பணத்தை தனிப்பட்ட பெரு முதலாளிகளுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கக் காரணமான அவர், அதனை ஏன் வசூல் செய்யவில்லை?

8. வசூல் செய்யாமல், அதனை வாராக்கடன் என

தொடர்ச்சி 5ம் பக்கம்

# தேர்தல் ஆதாயத்திற்காக ராமநவமி வன்முறை!



த.லெனின்

**வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஆதாயம் பெறும் நோக்கில் பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் கர்நாடகா மாநிலத்தில் ராமநவமி வன்முறையை சங்பரிவார் கும்பல் கட்டமைத்துள்ளது.**

2024 நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்ற வேளையில், முன்கூட்டியே இது போன்ற கலவரங்கள் மூலம் தங்களுக்கு ஏற்ற அரசியல் நிலவரங்களை உருவாக்கும் முயற்சியாகத்தான் இவை திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.

மேற்கு வங்கத்தில் நடந்த இந்த ராம நவமி கலவரத்தை காரணமாக வைத்து முதல்வர் மம்தா பானர்ஜி பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்மாநில ஆளுநர் மூலம் நிலமையை கேட்டறிந்ததாகவும், கலவரக்காரர்கள் மீது துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், கலவரம் நடத்தியதே இவர்களின் திட்டமிடல்தானே!

மத்திய பிரதேச கர்கோனின் பகுதியில் ஏற்பட்ட கலவரத்தால் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ராம நவமி, இஸ்லாமியர்கள் புனிதமாக கொண்டாடப்படும் ரமலான் நோன்பு காலத்தில் வருவதால் அவர்களை ஆத்திரமூட்டவும், மிரட்டுவதற்குமான ஒரு வழிமுறையாக இந்த ராம நவமி ஷோபா யாத்திரையை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

**மகாராஷ்டிராவில்...**

மகாராஷ்டிர மாநிலம் ஜல்கான் மாவட்டத்தில் மசூதியில் நமாஸ் நடந்து கொண்டிருந்தபோது மசூதிக்கு முன்பு பெரும் பேண்டு வாத்திய ஒலியுடன் ஊர்வலமாகச் சென்று ஆத்திரமூட்டியதால் ஏற்பட்ட வன்முறையில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

மார்ச் 30ஆம் தேதி சத்ரபதி சம்பாஜி நகரில் கிராத்புரா பகுதியில் ஆட்சேபகரமான வகுப்பு வெறி முழக்கங்களோடு, பைக்கில் வந்த இளைஞர்கள் குழுவை உள்ளூர் இளைஞர்கள் எதிர்கொண்டதால் அங்கு கலவரம் மூண்டது. ஒன்பது காவல்துறை வாகனங்கள் தீ வைக்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டால் ஒருவர் உயிரிழந்தார். ஐந்து அதிகாரிகள் உள்பட 14 போலீசார் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

அதே போல் அன்று இரவு மும்பை மாதுவானி பகுதியில் நடந்த ஊர்வலத்தின்போது, உரத்த ஒலியுடன் வந்த ஊர்வலத்தை கண்டித்து அந்தப் பகுதியைச் சார்ந்த இஸ்லாமியர்கள் வாக்குவாதம் செய்ததால், ஒரு கலவரம் மூண்டது. இதில் 20க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

**மேற்கு வங்கத்தில்...**

மேற்கு வங்க மாநிலம் ஹவுரா மாவட்டத்தில் ராமநவமி ஊர்வலம் இஸ்லாமிய குடியிருப்பு பகுதிகளுக்குள் வேண்டுமென்றே சென்றதால் பதற்றம் ஏற்பட்டு கல்லெறிதல் மற்றும் வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. இந்த வன்முறை இரண்டு நாட்கள் நடைபெற்றுள்ளன. அதுபோலவே அதே மாநிலத்தில் தல்ஹோலா நகரில் நடந்த ஊர்வலத்தின் போது வன்முறை வெடித்து ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்துள்ளனர்.

**பீகாரில்...**

பீகாரில் உள்ள சசரத்தில் மார்ச் 30 அன்று நடந்த ஊர்வலத்தில் பங்கேற்று திரும்பியவர்கள் மீது கற்களை வீசியதாக வதந்தி பரப்பி, பதற்றத்தை ஏற்படுத்தி பீகார் ஷெரிப்பில் உள்ள மற்றொரு மசூதி மீது கொடும் தாக்குதல் நடத்தப்பட்டு அதன் நூலகமும் இந்த வகுப்புவாத விஷமிகளால் எரிக்கப்பட்டுள்ளது.

அடுத்தநாளும் அங்கு வன்முறை தொடர்ந்து நடைபெற்றதுடன் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டு கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

பீகார் மாநிலத்தைச் சார்ந்த நாளந்தாவில் மார்ச் 31ஆம் தேதி இரு மத குழுக்களுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர். இதற்கு காரணம் வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தள் சார்பில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற ஷோபா ஊர்வலத்தின்போது அதில் வந்தவர்கள், முஸ்லீம்கள் குறித்து அநாகரிக்க முழக்கங்கள் எழுப்பப்பட்டதை ஒட்டி கலவரம் மூண்டது.

பல வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டன. 110 ஆண்டுகள் பழமையான 4500க்கும் மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட மதரசா நூலகம் இந்த இந்துத்துவ வன்முறைக் கும்பலால் எரித்து சாம்பலாக்கப்பட்டது.

**ஹரியானாவில்...**


ஹரியானா சோனிப்பட்டில் நடைபெற்ற ஊர்வலத்தில் இந்த இந்துத்துவ வகுப்பு வெறியர்கள், இஸ்லாமிய எதிர்ப்பு வெறி முழக்கத்தோடு ஒரு மசூதியின் மீது தங்களது காவிக் கொடியை ஏற்றியுள்ளனர். பின்பு ஐந்துபேர் கைது செய்யப்பட்டு அம்மசூதிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இப்படி இந்த ஆண்டு நடத்தப்பட்ட கலவரங்கள் அனைத்தும் மேற்கு வங்கம், பீகார், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் கர்நாடகா மாநிலங்கள் ஆகும்.

அதாவது, பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் மற்றும் தேர்தலை எதிர்நோக்கி உள்ள அவர்கள் ஆளும் கர்நாடக மாநிலத்திலும்தான் இந்த கலவரங்கள் அறங்கேற்றப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொண்டால் இந்த கலவரங்களின் அரசியல் பின்னணியை நாம் அறிய முடியும்.

இப்படி தொடர்ந்து ராமநவமி ஷோபா ஊர்வலங்களை நடத்துவது ஒன்றும் அவர்களுக்கு புதிதல்ல. சிவசேனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய் ராவத் கூறியது போல, இந்த வெறிக் கலவரங்களைக் கண்டு ராமரே அமைதி இழந்திருப்பார் என்பதையும் கருத்தில் கொண்டால், இந்துத்துவ வாதிகளின் முன்கூட்டிய திட்டமிடல்களில் ராம நவமி ஊர்வலங்கள் பக்திக்காக நடத்தப்படுவதில்லை. மாறாக வன்முறை மூலம் தங்களின் அரசியல் லட்சியத்தை அடைவதற்கான வழிமுறையாகத்தான் உள்ளது என்பதை நாம் சான்றுகளோடு நிரூபிக்க முடியும்!





> ஆர்.எஸ்.எஸ். 1925ஆம் ஆண்டு ராவணனை ராமன் கொன்ற நினைவு நாளான விஜயதசமி அன்றுதான் தொடங்கப்பட்டது. அது பயன்படுத்தும் கொடி காவி நிறத்தில் நிரந்தரமாக வடிவமைக்கப்பட்ட ராமர் பயன்படுத்திய கொடி என்றும், சத்ரபதி சிவாஜியும் இந்தக் கொடியைத்தான் பயன்படுத்தினார் என்ற கருத்தும் உருவாக்கப்பட்டது.

ராவணனை ராமன் கொன்ற நினைவு நாளான விஜயதசமி அன்றுதான் 1925ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்டது. அது பயன்படுத்தும் கொடி காவி நிறத்தில் நிரந்தரமாக வடிவமைக்கப்பட்ட ராமர் பயன்படுத்திய கொடி என்றும், சத்ரபதி சிவாஜியும் இந்தக் கொடியைத்தான் பயன்படுத்தினார் என்ற கருத்தும் உருவாக்கப்பட்டது.

ராமநவமி இந்து கடவுள் என்று அழைக்கப்படும் ராமர் பிறந்தநாளாகும். இந்து நாட்காட்டியின்படி சைத்ரா மாதத்தின் ஒன்பதாவது நாள் வருவது அதாவது மார்ச், ஏப்ரல் மாதங்களில் வருவது ராமநவமி ஆகும்.

1978ஆம் ஆண்டு ராம நவமி ஊர்வலம் பீகார் தின்னபஸ்தி என்ற பழங்குடி பகுதியில் சங் பரிவார அமைப்புகளால் பழங்குடியினரை இந்து மதமயமாக்குவதற்கான முயற்சியாக தொடங்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூர் டாடாவின் இரும்பு எஃகு ஆலை இருக்கும் பழங்குடியினர் பகுதியான அங்கு திட்டமிட்ட முறையில் சங்க பரிவார அமைப்புகள் கலவரத்தில் ஈடுபட்டனர். 108 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 79 பேர் முஸ்லீம்கள், 25 பேர் இந்துக்கள். 1984 முதல் 1993வரை இந்து வாக்குவங்கியை உருவாக்குவதற்கு இந்த ஊர்வலங்கள் பயன்படுத்தப்பட்டன.

1986 ஏப்ரல் 16 ல் நடைபெற்ற இந்த ஊர்வலங்களில் முஸ்லீம் எதிர்ப்பு முன்னிலைப்படுத்தப்பட்டது.

1987ல் ராமநவமி ஷோபா யாத்திரைகள் நாடு முழுவதும் திட்டமிடப்பட்டன.

1991 ஒடிசா மாநிலம் பத்ரக்கில் வகுப்புவாத வன்முறையை ராம நவமி அன்று முஸ்லீம் பகுதியில் ஊர்வலமாகச் சென்று அறங்கேற்றினர்.

2006ல் அலிகாரிலும், 2009ல் மகாராஷ்டிரா புஷாத்திலும், 2014ல் கான்பூரிலும், 2016 ஹசாரிபாக்கிலும், 2018 மேற்கு வங்கம் ரானிகஞ் பகுதியில் கலவரங்கள் நடத்தப்பட்டன. 2019ல் மேற்கு வங்கம் அசம்சோலிலும், 2022 நாடு முழுவதும் பல மாநிலங்களிலும் இந்த கலவரங்கள் மூண்டது. குஜராத்திலும் இந்த கலவரம் ஏற்பட்டது.

ஷோபா ஊர்வலம் என்றால் ஒளிரும் புகழ்பெற்ற பாரம்பரிய ஊர்வலம் என்பதாகும். இது அகாராக்கள் அல்லது சன்னியாசிகளின் ஆணைகளுக்கு தொடர்புடையதாகச் சொல்லப்படுகிறது.

பாரம்பரியமாக ராமநவமி என்பது ராமருக்கு நெருக்கமான இடங்களான அயோத்தி, ராமேஸ்வரம், பத்ராசலம், சீதாமர்கி மற்றும் சில இடங்களில் மட்டும்தான் தேர் இழுக்கும் ஊர்வலமாக நடைமுறையில் இருந்தது.

இந்துத்துவ வாக்கு வங்கி அரசியலுக்காக அதனை நாடு முழுவதும் வெறுப்பு பிரச்சாரத்தோடு இணைத்து இஸ்லாமிய எதிர்ப்பை மையப்படுத்தி வெறுப்பு அரசியலுக்கான இடமாக மாற்றியதுதான் சங்க பரிவாரங்கள் செய்த மாபெரும் சதி!

வெறுப்பு அரசியல் மீது நெருப்பு வைப்போம்!

தொடர்புக்கு: 9444481703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 01

## உச்ச நீதிமன்றத்தில் எதிர்க்கட்சிகள் மனு

எதிர்க்கட்சித் தலைவர்களைத் துன்புறுத்தவும், கருத்து வேறுபாடுகளைத் தெரிவிக்கவே விடாமல் கட்டுப்படுத்தவும் மத்திய புலனாய்வு அமைப்புகளை நரேந்திர மோடி அரசு தவறாகப் பயன்படுத்துகிறது எனக் கூறி 14 அரசியல் கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தன.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றத்தால் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டார். அதே நாளில் அவர் மக்களவை எம்.பி.யாக தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதற்கு அடுத்த நாள் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஆம் ஆத்மி கட்சி, ஒய்.எஸ்.ஆர். பாரத ராஷ்டிர சமிதி, தெலுங்கு தேசம் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், சிவசேனா, ஐக்கிய ஜனதா தளம், சமாஜ்வாதி கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதச்சார்பற்ற ஜனதா தளம், திராவிட முன்னேற்றக் கழகம், ராஷ்ட்ரீய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் கட்சி, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மற்றும் ஜம்முகாஷ்மீர் தேசிய மாநாடு போன்றவை இந்த மனுவை தாக்கல் செய்தன.

வழக்கை வாதிட்ட வழக்கறிஞர் சிங்வி, கைது மற்றும் காவலில் வைப்பதற்கான சரியான வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்,

ஒருவரை கைது செய்வதற்கு அல்லது சிறை வைப்பதற்கு முன்பு, 'அவர் உடனடி ஆபத்தை விளைவிப்பவராக உள்ளாரா? சான்றாவணங்களை கலைத்து விடுவார் அல்லது சேதப்படுத்துவார் என்று கருதுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளனவா? சாட்சிகளின் மீது தனது செல்வாக்கை செலுத்துவார் அல்லது மிரட்டுவார் என்று கருத இடம் உள்ளதா?' என்ற மூன்று விஷயங்களை உறுதிப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறிவைக்கும் போது இதுபோன்ற நிபந்தனைகள் அநேகமாக கடைப்பிடிக்கப்படுவதில்லை என அவர் வாதிட்டார்.

இந்திய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் மற்றும் நீதிபதி ஜே.பி. பார்திவாலா ஆகியோர் இந்த விஷயத்தில் பொதுவான உத்தரவுகளை வெளியிட முடியாது. அரசியல்வாதிகளுக்கு சிறப்பு வழிகாட்டுதல்களை வழங்குவது சாதாரண குடிமக்களை விட அவர்கள் அதிக பாதுகாப்பை அனுபவிக்கிறார்கள் என்று அர்த்தப்பட்டு விடக்கூடாது என்றனர்.

மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ) மற்றும் அமலாக்க இயக்குநரகம் (இடி) போன்ற மத்திய அமைப்புகள் நடத்தும் விசாரணைகளும் கைது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. ஆனால் மிக மிக குறைவான அளவிலேயே வழக்குகள் தண்டனை கிடைக்கிறது. ஒருவரின் உருவத்தைச் சிதைக்கவும், குற்றவாளி போல சித்தரிக்கவுமே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதே நேரத்தில் கறை படிந்த பாஜக தலைவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. கடும் முறைகேடுகளில் கைது செய்யப்பட்டவர்கள் பாஜகவில் சேர்ந்தவுடன் அனைத்து நடவடிக்கைகளும் கைவிடப்படுகின்றன. புலனாய்வு மற்றும் அமலாக்க துறைகளில் செயல்பாடு எதிர்க்கட்சிகளை குறிவைத்து தாக்கவும், அவர்களை ஆளுங்கட்சியை நோக்கி இழுக்கவும், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களை பாதுகாக்கவுமே பயன்படுத்தப்படுகிறது என்பது புள்ளி விபரங்களோடு உச்சநீதிமன்றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

'இந்தப் புள்ளிவிவரங்கள் அரசியல்வாதிகளுக்கு மட்டுமே பொருந்தும், புள்ளிவிவரங்களை வழிகாட்டுதல்களாக விரிவுபடுத்த முயற்சிக்கிறீர்கள். ஆனால், அரசியல்வாதிகளுக்கு தனி வழிகாட்டுதல்களை வழங்க முடியாது. அவர்களுக்கு எப்படி வேறுபட்ட நடைமுறைகள் இருக்க முடியும்?' தலைமை நீதிபதி சந்திரசூட் கேட்டார்.

அதே சமயத்தில் மனுவில் கூறப்பட்ட விஷயங்களை அவர் மறுக்கவில்லை. "தலைவர்களைத் தேர்ந்தெடுத்து குறிவைக்க ஏஜென்சிகள் பயன்படுத்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது நிகழ்வுகள் இருந்தால், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளுடன் மீண்டும் வாருங்கள். நாம் வகுத்துள்ள சட்டத்தின் அடிப்படையில், வழக்கின் உண்மைகளைப் பொறுத்து பொதுவான கொள்கைகளை உருவாக்க முடியும்" என்று அவர் கூறியுள்ளார்.

ஒரு கொடூரமான அரசை எதிர்த்த போராட்டம் நாடாளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும், வீதிகளிலும் ஒருசேர நடத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் எதிர்க்கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு முக்கியமானது. எதிர்காலத்தில் ஏன் இதையெல்லாம் சட்டப்படி நீதிமன்றத்தில் முறையிடவில்லை என்ற கேள்வி எழுப்பப்பட இயலாது. மக்கள்தான் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தி என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# பல்வீர் சிங்கா? பல் புடுங்கி சிங்கா?





**கோபம் பொத்துக் கொண்டு வரும்போது அடுத்து வரும் வார்த்தை 'பல்லை உடைப்பேன்' என்பதாகும். வார்த்தையில் மட்டுமல்ல நடைமுறையில் உடைத்தே காட்டியிருக்கிறார் காவல்துறை ஏ.எஸ்.பி. பல்வீர் சிங்.**

கொடூர அடக்கு முறைகளை எளிய மக்கள் மீது தமிழக காவல்துறை வெவ்வேறு வடிவில் ஏவுகிறது. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தைச் சார்ந்த ஜெயராஜ் அவரது மகன் பெலிக்ஸ் ஆகியோர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு காவல்துறையால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இதைக் கண்டு தமிழகம் துடி துடித்து போனது.

அந்த உயிர் பறிப்பின் ரத்த காயம் ஆறும் முன் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் சப் டிவிஷனல் ஏ. எஸ். பி. பல்வீர் சிங் சிறு சிறு குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டபோது அவர்களை விசாரணை என்கிற பெயரில் பெரும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கி உள்ளார்.

சீருடையில் இருக்கும் காவல் அதிகாரியான பல்வீர் சிங், குற்றம் சாட்டப்பட்டவர்களை கண்டவுடன் அரைக்கால் டவுசர், டீ சர்ட், கையில் க்ளோஸ் போட்டுக் கொண்டு "முழு கொடூரனாக" மாறி, குற்றம் சாட்டப்பட்டவர்களை கொடூரமாக தாக்கியுள்ளார்.

**குறிப்பாக ஜல்லி கற்களை குற்றவாளிகளின் வாயில் பல்லுக்கடியில் கடித்துக் கொள்ள சொல்லி "கிக் பாக்ஸிங்" முறையில் தாக்கியுள்ளார்,"கட்டிங் பிளேயர்" கொண்டு பற்களை தட்டி தட்டி உடைத்து பிடுங்கி உள்ளார். "ஆண்குறியை" குறிவைத்து தாக்கியுள்ளார். புதிதாக திருமணம் ஆனவர் என்று சொன்னதற்காக "விரையை" அழுத்தி நசுக்கி உள்ளார் என பல்வேறு குற்றசாட்டுகளை பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். இப்படி 30 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

பாதிக்கப்பட்ட பலர் சேரன்மாதேவி சார் ஆட்சியர் விசாரணையிலும், அதேபோன்று தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்திலும் பங்கேற்று சாட்சியம் அளித்துள்ளனர். தற்போது ஏ. எஸ். பி. பல்வீந்தர் சிங் பணியிட நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பல்விந்தர் சிங் மெக்கானிக்கல் இன்ஜினியர், இன்ஜினியராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். பின்னர் இவர் குடிமைப்பணி தேர்வு எழுதி காவல் அதிகாரியாக தேர்வு பெற்றுள்ளார். பயிற்சி அதிகாரியாக தமிழ்நாட்டிற்கு வந்தவர்தான் இந்த கொடூரத்தை பலரிடம் தொடர்ச்சியாக செய்துள்ளார்.

இவர் காவல்துறையில் பணியில் சேருவதற்கு உந்து சக்தியாக காவல்துறையில் பணியாற்றிய அவரது மாமா இருந்துள்ளார். அவர் ராஜஸ்தானில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பல்லை பிடுங்குவதில் கை தேர்ந்தவராம். அதேமுறையில்தான் இவர் தமிழ்நாட்டிலும் கையாண்டுள்ளார். ஆனால், பல்வீர் சிங் ஒன்றை மறந்துவிட்டார். இது ராஜஸ்தான் அல்ல தமிழ்நாடு என்பதை மறந்து விட்டார். அதனால்தான் கடுமையான மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளார்.

இவரின் இந்த அட்டகாசத்தை சம்பந்தப்பட்ட காவல்துறை மேலதிகாரிகள் இதுவரை யாரும் கண்டும் காணாமல் இருந்துள்ளனர். அல்லது இது சர்வசாதாரணம் என கடந்து போய் உள்ளனர். இந்த துணிச்சலில் தான் இப்படிப்பட்ட கொடூரங்கள் தொடர்ச்சியாக அரங்கேறி உள்ளன. எனவே, இதில் பல்விந்தர் சிங் மட்டும் குற்றவாளி அல்ல. மாறாக அந்த மாவட்ட, மாநில காவல்துறையும், தலைமை தாங்கும் அரசும், முதலாளித்துவ ஆதிக்கமும்தான் குற்றவாளிகள்.

தனக்கு கீழ் வேலை செய்யும் சக காவல் அதிகாரியை கண்காணிக்க முடியாதவர், எப்படி மக்களையும், குற்றவாளிகளையும் கண்காணிப்பார் என்கிற கேள்வி இதில் எழுகிறது.

இந்த பிரச்சனையில் எழுகிற வேறொரு கேள்வி தொழில் முறை குற்றவாளிகளையோ, கூலிக்காக குற்றம் புரிவோரையோ, கஞ்சா வியாபாரிகளையோ, அல்லது இவர் கைப்பற்றியதாக சொல்லப்படும் என்பது சவரன் நகை திருட்டில் ஈடுபட்டவர்களின் பற்களையோ இவர் உடைக்கவில்லை, காயப்படுத்தவில்லை. அவ்வாறு செய்ய மாட்டார்கள். ஆனால் சாதாரண குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தான் இந்த கொடூரம் நிகழ்ந்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைகிற போது, இந்த காயங்கள் குறித்து எந்த நீதிபதியும் கேள்வி எழுப்பாதது ஏன் என்கிற கேள்வியும் நமக்கு ஏற்படுகிறது. இவையெல்லாம்தான் துணிச்சலை காவல்துறைக்கு தந்திருக்கிறது. எனவே இதில் பல்விந்தர் சிங்கை மட்டும் குற்றம் சாட்டியோ, தண்டித்தோ நாம் இந்த சீர் கெட்ட அமைப்பை சீர்படுத்தி விட முடியாது. மாறாக, இதை கண்காணித்து சீர்படுத்த வேண்டிய, கடமை தவறிய அனைவர் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

எவ்வளவு பெரிய குற்றவாளியாக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்தி, எவ்வளவு முடியுமோ அவ்வளவு கடுமையான தண்டனையை வாங்கித் தருவதுதான் காவல்துறையின் வேலை. இவர்களே நீதிமன்றங்களாக மாறி குற்றவாளிகளை தண்டிப்பது காவல்துறையின் வேலையோ, கடமையோ அல்ல, காவல்துறை இவ்வாறு தொடர்ந்து அத்துமீறும் என்றால் நீதிமன்றங்களின் வேலை என்ன?

சிரம் அறுத்தல் வேந்தருக்கு பொழுதுபோக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கோ உயிரின் வதை என்பதை அரசு உணர வேண்டும். இது போன்ற கொடூரங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், இதை கண்காணிக்க தவறியவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இது போன்ற கொடூரங்கள் அரங்கேறாமல் இருக்கும்.

காவல்துறை கொடூரங்களை பற்றி மிசாவில் உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு அவர்கள் சொன்னது தான் நம் நினைவு வருகிறது.

"நேற்று வரை காவல்துறை நமது மாதவனின் கையில் இருந்தது. அவற்றை சீர்திருத்த தவறி விட்டோம். இப்போது அனுபவிக்கிறோம்" என்று கூறினார். அந்த வாசகத்தை திமுக அரசு மறக்க கூடாது. காவல்துறை மனித உரிமை மீறலில் ஈடுபடுவதை அனுமதிக்க கூடாது. உரிய நடவடிக்கை தேவை.

– என்.எஸ். பிரதாப்சந்திரன்
93826 79798

# பிரதமர் மோடி பட்டம் பெற்றது உண்மையா?



வ.மணிமாறன்

**பிரதமர் நரேந்திர மோடியின் பட்டப் படிப்பு குறித்து மீண்டும் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.**

2014 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது பிரதமர் நரேந்திர மோடி தாக்கல் செய்த வேட்புமனுவில், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் பிரதமர் பதவியேற்ற பிறகு இது குறித்த கேள்விகள் எழுந்தன. பிரதமர் அலுவலகத்திடம் தகவல் உரிமைச் சட்டத்தில் பலரும் விளக்கம் கேட்டனர். அதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்ட பிரதமர் அலுவலகம், தேர்தல் ஆணையத்தை அணுகுமாறு அறிவுறுத்தியது.

தேர்தல் ஆணையத்திடம் தகவல் உரிமைச் சட்டப்படி விளக்கம் கேட்டனர். அதற்குத் தங்களிடம் எந்த விவரமும் இல்லை என தேர்தல் ஆணையம் கைவிரித்தது. குஜராத் பல்கலைக்கழகத்திடம் கேட்டதற்கு, தகவல் உரிமைச் சட்ட விதிகளின்படி இந்த தகவல் பொது வெளியில் பகிரக் கூடியது அல்ல என்று கூறி விளக்கம் தர மறுத்துவிட்டது.

டெல்லி பல்கலைக்கழகமும் தகவல் உரிமைச் சட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டது. வரிசை எண் (ரோல் நம்பர்) கொடுத்தால்தான் பதிலளிக்க முடியும் என்று கூறி டெல்லி பல்கலைக் கழகம் கைவிரித்து விட்டது.


இதனையடுத்து, பிரதமர் அலுவலகம் மற்றும் குஜராத் பல்கலைக்கழகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களுக்குப் பதில் தர மறுத்துவிட்டன.

இந்நிலையில், தலைமைத் தகவல் ஆணையருக்கு (சிஐசி) டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கடிதம் எழுதினார். அதில், "பிரதமரின் கல்வித் தகுதியை அறிந்துகொள்ள தேசம் விரும்புகிறது. அவருடைய கல்வித் தகுதியை பொதுவெளியில் அறிவியுங்கள்.

பிரதமராக இருப்பவரின் கல்வித் தகுதியை அறிந்து கொள்வது குடிமக்களின் உரிமை. எனவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி அந்த விவரங்களை வழங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய கடிதத்தையே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படியான மனுவாக தலைமைத் தகவல் ஆணையர் எடுத்துக்கொண்டார். "தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேர்தல் ஆணையம் கல்வித் தகுதி எதனையும் நிர்ணயிக்கவில்லை. இந்திய ஜனநாயகத்தின் சிறப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

இருப்பினும், முதலமைச்சர் பதவியில் இருக்கும் ஒரு குடிமகன் பிரதமரின் பட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற விரும்புவதால், அதனை வெளியிடுவதுதான் சரியானதாக இருக்கும்" என தலைமைத் தகவல் ஆணையர் தெரிவித்தார்.




> "ஒட்டுமொத்த அரசியல் அறிவியல்" துறையில் பட்டம் பெற்றதாக பிரதமரின் பட்டப்படிப்பு கூறுகிறது. மைக்ரோசாப்ட் நிறுவனம் 1992ல் வெளியிட்ட எழுத்துருவில் 1978லேயே பட்டம் பெற்ற சான்றிதழ் வடிவமைக்கப்பட்டிருந்தது கண்டு உலகமே சிரிக்கிறது.

எனவே, "டெல்லி பல்கலைக்கழகம், குஜராத் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தலைமைத் தகவல் தொடர்பு அதிகாரிகள் கவனமாகத் தேடி, நரேந்திர தாமோதர் மோடி பெயரில் 1978 (டெல்லி பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம்), 1983 (குஜராத் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்) ஆகிய ஆண்டுகளில் பட்டம் பெற்ற விவரங்களை டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு விரைவாக வழங்க வேண்டும்" என தலைமைத் தகவல் ஆணையர் உத்தரவிட்டார்.

தலைமைத் தகவல் ஆணையரின் கடிதம் சென்றவுடன் குஜராத் பல்கலைக்கழகம் வழக்குத் தொடர்ந்தது. அதனை விசாரித்து வந்த குஜராத் உயர்நீதிமன்றம், கடந்த வாரம் தீர்ப்பளித்துள்ளது.

அதில், பிரதமர் மோடியின் பட்டப்படிப்பு விவரங்களைக் கேட்ட டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ரூ.25 ஆயிரம் தண்டம் விதித்து ஆணையிட்டது. சான்றிதழ் நகல் வழங்க வேண்டும் என்ற மத்திய தகவல் ஆணையத்தின் உத்தரவையும் ரத்து செய்து ஆணையிட்டுள்ளது.

குஜராத் உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பால் மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் பட்டப்படிப்பு சான்றிதழ் என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்ட இரண்டு சான்றிதழ்களும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது.

குஜராத் பல்கலைக்கழகத்தில் பெற்றதாக வெளியிடப்பட்ட முதுகலை பட்டத்தில், "ஒட்டுமொத்த அரசியல் அறிவியல்" துறையில் பட்டம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் 1992 ல் வெளியிட்ட எழுத்துருவில் (ஃபான்ட்), 1978 லேயே பட்டம் பெற்ற சான்றிதழ் வடிவமைக்கப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். குஜராத் யூனிவர்சிட்டி என்பதில் உள்ள யுனிவர்சிட்டி என்ற வார்த்தையும், நரேந்திர மோடி என்பதில் உள்ள நரேந்திர என்ற வார்த்தையும் சான்றிதழில் தவறாக இருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இத்தனை பிழைகளுடன் எந்தப் பல்கலைக்கழகம் சான்றிதழ் வழங்கியிருக்கும்?

"ஒட்டுமொத்த அரசியல் அறிவியல்" என்ற துறையே குஜராத் பல்கலைக்கழகம் உட்பட உலகில் எங்குமே கிடையாது. பிறகு எப்படி நரேந்திர மோடி அதனைப் படித்திருக்க முடியும்?

நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த போது அளித்த பேட்டி ஒன்றில், 17 வயதுக்கு மேல் நான் எதுவும் படிக்கவில்லை என்று கூறியிருப்பதை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனக்குத் திருமணம் ஆனதையும், நீண்ட வருடங்களாக மனைவியை விட்டு பிரிந்திருப்பதையும் பிரதமர் நரேந்திர மோடி மறைத்து வந்தார். பின்னர் அம்பலமானவுடன் அதனை ஒப்புக்கொண்டார்.

கேமரா கண்டுபிடித்து விற்பனைக்கு வரும் முன்பே, அந்தக் கேமராவில் போட்டோ எடுத்ததாக நரேந்திர மோடி பெருமை பேசினார். மின்னஞ்சல் (இமெயில்) கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் முன்னரே, தான் மின்னஞ்சல் அனுப்பியதாக தம்பட்டம் அடித்தார்.

இப்படி அனைத்திலும் சிறந்தவராக, அனைத்து வல்லமையும் கொண்டவராக, 56 அங்குல மார்பகம் உடையவராக பெரும் பிம்பம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டங்களும் கூட அப்படிப் பெருமை பேசுவதற்காக கூறப்பட்டதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது பற்றி மூச்சுக்கூட விடாமல், பிரதமர் மோடி காக்கும் பேரமைதி இந்த சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

பாசிஸ்ட்டுகள் எல்லோரும் பிம்பங்களால்தான் கட்டமைக்கப்பட்டிருப்பதை வரலாறு அறியும். இதில் பிரதமர் மோடியும் விதிவிலக்கு இல்லை என்பதை இந்த நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

---

3ம் பக்கத் தொடர்ச்சி

அறிவித்து, அதனை தள்ளுபடி செய்தும், முதலாளிமார்களின் மனம் குளிர செய்துள்ளீர்களே ஏன்?

**9.** கல்வி கற்க வசதியின்றி ஏழை, எளிய குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் பெற்ற கல்விக் கடனை ரத்து செய்ய மறுப்பது ஏன்? அவர்கள் பெற்ற கடனை திரும்பப் பெற அம்பானி குடும்பத்திற்கு வசூல் செய்ய அனுமதி கொடுத்து, அவர்கள் அடியாட்கள் சகிதம் கடன் பெற்ற மாணவர் வீட்டிற்கு சென்று அராஜகம் புரிய அனுமதித்தது ஏன்?

**10.** அதானி, அம்பானி, லலித் மோடி, நீரவ் மோடி போன்ற மோசடி கும்பலுக்கும், பிரதமருக்கும் உள்ள உறவு எத்தகையது?

**11.** தனிப்பட்ட அதானி என்ற நபர், நாட்டை சூறையாடிய நபருக்கு, நாட்டின் பிரதமர் ஏஜெண்டாக பணிபுரியலாமா? இது நம் நாட்டிற்கு ஏற்பட்ட அவமானகரமான செயல் அல்லவா? இத்தனைக் கண்டு பிரதமர் வெட்கி தலை குனிய வேண்டாமா?

**12.** குற்றவாளி என்று கருதப்படுகின்ற நபருக்கு, துணை புரிவதும், குற்றவாளியை பாதுகாப்பதும் சட்ட விரோத செயல் அல்லவா? அத்தகைய சட்டவிரோத செயலை நாட்டின் பிரதமராக இருப்பவர் மேற்கொண்டு இருப்பது அவமானமாக இல்லையா?

**13.** அதானி என்கிற ஒற்றை நபருக்காக நாடாளுமன்றத்தையே முடக்குவது அப்பட்டமான ஜனநாயக விரோத செயல் அல்லவா? இதனை நாட்டின் பிரதமர் முன்நின்று மேற்கொள்வது இழிசெயல் அல்லவா?

**14.** இவ்வாறாக நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நாட்டின் பிரதமரை விமர்சிக்கக் கூடாதா? அவ்வாறு விமர்சிப்பது தவறு எனில், ஜனநாயகம் என்ன ஆனது?

**15.** தேசப்பிதா என போற்றப்படும் மகாத்மா காந்தி – லண்டன் சென்று படித்து பட்டம் பெற்றார் – வழக்கறிஞராக பணியாற்றினார் என்பது உலகிற்கே தெரியும். ஆனால், பா.ஜ.க.வை சேர்ந்த காஷ்மீரத்து ஆளுநர் காந்தி படிக்கவில்லை – பட்டம் பெறவில்லை என்று பகிரங்கமாக கூறியதை, காந்தியின் சமாதியின் முன்பு முதுகை வளைத்து இரு கைகளை குவித்து, முக பாவத்தை மாற்றி ஆண்டுதோறும் அஞ்சலி செலுத்திடும் மோடி தற்போதுவரை கண்டிக்கவில்லையே ஏன்?

**16.** மோடி என்ன படித்துள்ளார் – பட்டம் பெற்றுள்ளாரா? என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி கேட்கக்கூடாதா? நாட்டின் பிரதமரின் கல்வியறிவு எத்தகையது என்பதனை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள உரிமை இல்லையா?

**17.** இத்தகைய கேள்விகளை எழுப்பினால் தண்டிக்கப்படுவீர்கள் – பதவிகள் பறிக்கப்படும், அதிகாரம் பறிக்கப்படும், வருமான வரித்துறை சீறிப் பாயும், அமலாக்கத்துறை சிலிர்த்தெழுந்து நடவடிக்கை எடுக்கும்!

நாட்டின் பிரதமரே, நரேந்திர மோடியே – நீங்கள் என்ன சர்வாதிகாரியா?

"இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்" என்று எங்கள் மா கவி பாரதி, ரஷ்யாவின் ஜார் மன்னர் ஆட்சி குறித்து விமர்சித்தார். அத்தகைய கொடிய ஆட்சி வீழ்ந்ததையும் குறிப்பிட்டார்.

நாட்டின் பிரதமரே, நயவஞ்சகரே,

"பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.. கருடன் சொன்னது.." என்ற கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் தான் நினைவிற்கு வருகின்றன.


அதிகாரம் என்ற ஒன்று தன் கைவசம் இருப்பதால், எதனையும் செய்யலாம் என்ற இறுமாப்பு வேண்டாம்.

உங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தை காட்டிலும், வலிமை பொருந்தியது மக்களிடம் உள்ள வாக்கு அதிகாரம் என்பதனை மறந்துடல் வேண்டாம்!

2024 பொதுத் தேர்தல் வெகு தூரத்தில் இல்லை – உங்களின் இறுமாப்பை, தன்னகங்காரத்தை, ஆணவத்தை அகற்ற நாட்டு மக்கள் தயாராகி விட்டனர்!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

- ஆனந்த் பாசு

# கலாக்ஷேத்ராவில் பாலியல் அத்துமீறல்

**சென்னையில் உள்ள கலாக்ஷேத்ரா அறக்கட்டளை நிறுவனத்தில் கடந்த பல வருடங்களாக பாலியல் குற்றங்கள் நடந்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் இன்று அம்பலமாகியுள்ளது.**




கடந்த டிசம்பர் 24, 2022 அன்று கலாக்ஷேத்ராவின் மேனாள் இயக்குனர் லீலா சாம்சன், கலாக்ஷேத்ராவில் ஆசிரியர் ஒருவர் வயது வராத மாணவிகளைக் கூட பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாகத் தன் முகநூலில் குற்றம் சாட்டிப் பதிவிட்டிருந்தார். அந்த ஆசிரியரின் பெயர் குறிப்பிடாத அவர், அந்தப் பதிவையும் சிறிது நேரத்திலேயே நீக்கி விட்டார்(?!).

அதன் திரைப்பதிவை (screenshot), 'கோர்ஸ்பேஸஸ்' எனும் இணையம் அடுத்த நாளே பதிவிட்டவுடன், கலாக்ஷேத்ரா நடனப் பள்ளியில் உதவிப் பேராசிரியராக இருக்கும் ஹரி பரந்தாமன் மீது குற்றம் சாட்டி, பல மாணவிகள் பதிவிடத் தொடங்கினர்.

ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் சென்னையில் இயங்கும் கலாக்ஷேத்ரா அறக்கட்டளையின் உள்நிறுவனப் புகார்க் குழு, ஒரு கண் துடைப்பு விசாரனை நடத்தி, ஹரி பரந்தாமன் மீது குற்றும் இல்லை என்று கூறி விட்டது.

பின்னர், தேசிய மகளிர் ஆணையமும், ஹரி பரந்தாமன் மீது சாட்டப்பட்ட குற்றத்தை நிரூபிக்க சாட்சிகள் இல்லையென்று கூறி விட்டது. இதையடுத்து, கலாக்ஷேத்ரா நிர்வாகம், இனி இந்த விவகாரம் குறித்து எவரும் பேசினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தது.

ஆனால், இந்த அச்சுறுத்தலையும் மீறி, மார்ச் 30 அன்று, நான்கு ஆசிரியர்களான ஹரி பத்மன், சஞ்சித் லால், சாய் கிருஷ்ணன் மற்றும் ஸ்ரீநாத் ஆகியோருக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, நிறுவனத்தின் வளாகத்தினுள்ளேயே மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கினர்.

இரவு முழுதும் இந்த எழுச்சிமிகு போராட்டம் தொடர்ந்தது. நூற்றுக்கணக்கானோர் போராட்டம் நடத்திய பிறகு, காவல்துறை வழக்குப்பதிவு செய்து விசாரனை நடத்தி வருகிறது; ஊடகங்களும் வெளிச்சம் பாய்ச்சி வருகிறது.

இந்த விவகாரம் குறித்து 'தி ப்ரின்ட்', 'தி நியூஸ் மினிட்' போன்ற இதழ்கள் கலாக்ஷேத்ரா நிறுவனத்தில் நடைமுறையில் உள்ள 'குருசிஷ்ய' முறையிலான பயிற்றுமுறையை விமர்சனம் செய்து கட்டுரைகள் வெளியிட்டன.

இந்த நவீன யுகத்திலும் தொடரும் இத்தகைய குருகுல முறையைப் பற்றிய கேள்விகளை இவை எழுப்பின. கர்னாடக இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணாவும், குருசிஷ்ய முறை வகுப்புச் சூழலைக் கடுமையாகப் பாதிப்பதுடன், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வழி வகுப்பதாகவும், கலாக்ஷேத்ரா தலைவருக்கு கடிதம் எழுதினார்.

கடந்த காலத்தில், இதே போன்ற இன்னொரு பாலியல் குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது. மாற்று கலை மற்றும் நடனக் கலைக்கான இடமாக, பிரபல பரதநாட்டியக் கலைஞர் சந்திரலேகா சென்னை பெசன்ட் நகர் கடற்கரையோரமாக 'ஸ்பேசஸ்' எனும் திறந்த வெளிக் கலை அரங்கை உருவாக்கினார். சந்திரலேகா, " இந்தப் புனித இடம் உலக வரைபடத்தில் இடம் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கூறிய அந்த இடத்திலேயே அவரது கணவரும், பிரபல கலைஞரும், எழுத்தாளருமான சதானந்த் மேனன் பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளானது கலையுலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர் பாலியல் ரீதியாக மாணவிகளைத் துன்புறுத்தியதாகப் புகார் எழுந்தது. பிறகு, கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலையுலக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் குடிமை சமூகத்தின் அறிவுஜீவிகள் என்று அணி திரண்டு, மேனனுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டை விசாரிக்க வலியுறுத்தி ஒரு பொதுக் கடிதம் எழுதினர்.

பிரபல ஆங்கில இதழான 'கேரவன்', இந்தக் குற்றச்சாட்டுகளில் தொடர்புடையவர்கள் பலரின் பதிவுகளைத் தொடராக வெளியிட்டது. ஆனால், மேனன், 'தன் மீது தவறான மற்றும் அவதூறான குற்றச்சாட்டுகளை வெளியிட்டவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பது குறித்து அவர் பரிசீலித்து வருவதாக' அறிக்கை வெளியிட்டார்.

பாரம்பரிய நாட்டிய உலகில் முற்போக்கான சிந்தனைகளை விதைத்து, இரும்பு மனுஷியாகப் போற்றப்பட்ட பரத நாட்டியக் கலைஞர் சந்திரலேகாவின் அரங்கத்திலேயே இத்தகைய பாலியல் குற்றச்சாட்டுகள் நடந்ததாக, அதுவும் அவருடைய இணையர் மீதே 'குரு' என்கிற ஸ்தானத்திலிருந்து அவர் செய்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தது.

குற்றம் நிரூபிக்கப்படுகிறதா? அல்லது குற்றவாளிகள் தண்டிக்கப்படுகிறார்களா? என்பது ஒரு புறம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிற வகையில், குருவானவர் தெய்வமாகப் பாவிக்கப் படுவதற்குப் பதில் மதம் மற்றும் ஆட்சி அதிகாரப் பின்னணியில் பாலியல் அத்துமீறல்களில் ஈடுபடுகின்றனர். இவைகள் இனியும் சகிக்கப்பட மாட்டாது என்பதை இளம் தலைமுறையினர் தங்கள் போர்க்குணத்தால் நிரூபித்து வருகின்றனர்.

## கலாக்ஷேத்ராவில் சாதியக் கொடுமை

கலாக்ஷேத்ராவில் எல்லா சாதிகளைச் சேர்ந்த மாணவிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் மேலாக சாதியின் பேரால், இன்னும் கூடுதலான கொடுமைகளுக்கு உள்ளாகும் ஒரு மாணவியின் பேட்டி

"வகுப்பறைக்குள் போகும்போதோ, நடக்கும் போதோ, நிறைய டீச்சர், ஸ்டாஃப் எங்களிடம் எந்த காஸ்ட் நீங்க? ஐயரா, மலையாளியா, ஐயங்காரா என்றெல்லாம் கேப்பாங்க! அதுக்கேத்த மாதிரி எங்களுக்கு மார்க் போடுவாங்க. அதுக்கேத்த மாதிரி தான் மதிப்புக் குடுப்பாங்க!

நாங்க போஸ்ட் டிப்ளமா பண்ணனும்னா, அவங்களுக்கு புடிச்சவங்களுக்கு தான் கொடுப்பாங்க. மார்க் என்பது அவங்க போடுறது தான். நம்ம பெர்பார்மன்ஸ் வச்சு அவங்க மார்க் போட்டதே கிடையாது, இதுவரைக்கும்!

**– கலாக்ஷேத்ரா மாணவி பேட்டி**



## வினாடி – வினா

1. கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நடப்பதற்குத் தடை விதித்த தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான வைக்கம் போராட்டம் எப்போது தொடங்கியது?
2. வைக்கம் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்காக அழைக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் அன்றைய தமிழ்நாடு தலைவரின் பெயர் என்ன?
3. பாலியல் புகாரில் தகித்துக் கொண்டிருக்கும் கலாஷேத்ரா கல்வி நிறுவனம் எந்த ஆண்டு யாரால் தொடங்கப்பட்டது?
4. கலாஷேத்ராவை ஒன்றிய அரசு எந்த ஆண்டு கையகப்படுத்தி, ஒன்றிய கலாச்சார துறையின் கீழ் கொண்டுவந்தது?
5. இந்தியாவில் கொண்டாடப்பட்ட முதல் மே தினம் எங்கு நடந்தது? நடத்தியது யார்?
6. புல்புல் பறவை (கொண்டைக் குருவி) மீது உட்கார்ந்தவாறு அந்தமான் சிறையிலிருந்து பறந்து வந்து சென்றதாக கர்நாடக பாஜக அரசின் பாடநூலில் இடம்பெற்றவர் பெயர்?

விடைகள் : 9 ஆம் பக்கம்

## ஆவின் ஓய்வூதியர் தர்ணா

*தமிழ்நாடு ஆவின் ஓய்வூதிய திட்ட பயனாளிகள் நலச் சங்கம் சார்பில் எழும்பூரில் மார்ச் 30 அன்று தர்னா போராட்டம் நடைபெற்றது. இதில், ஏஐடியுசி தேசியச் செயலளார் டி.எம்.மூர்த்தி, சிஐடியு மாநிலத் தலைவர் ஏ.சௌந்தரராஜன், ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். ஆவின் ஓய்வூதிய நலச் சங்க மாநிலத் தலைவர் சி.குருநாதன் தலைமை வகித்தார். செயலர் ஒ.ஜெ.கதிர்வேலு முன்னிலை வகித்தார்.*

*போராட்டத்தின்போது, கருணை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்; அரசு ஊழியர்கள் இறந்தால் 'குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்குவது போல் தங்களது நிதி பங்களிப்புடன் இந்தத் திட்டத்தை ஆவின் ஓய்வூதியர்களுக்கு அமல்படுத்த வேண்டும்; மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு விடுப்புக்கான ஊதிய நிலுவைத் தொகையை வழங்கியதுபோல், ஓய்வு பெற்ற இணைய தொழிலாளர்களுக்கும் விடுப்பு நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.*

# தொழிலாளர்கள் நலனை தமிழக அரசு பாதுகாக்க வேண்டும்

## சட்டசபையில் டி.ராமச்சந்திரன் பேச்சு



**தமிழக சட்டசபையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நீர்வளத்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை மானிய கோரிக்கையின் மீது தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் பேசியதாவது:**



பேரவை தலைவர் அவர்களே, நாட்டிலேயே மிக அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம், உற்பத்தியில் இரண்டாவது பெரிய மாநிலம் தமிழ்நாடு.

தொழிலாளர்களுக்கு கௌரவமான வாழ்க்கையை தரக்கூடிய சம்பளத்தை வழங்குவதை உறுதி செய்வதும், சமூக பாதுகாப்பு தருவதும் நமது அரசின் இன்றியமையாத கடமையாகும்.

### முத்தரப்பு கூட்டங்கள் கூட்டப்பட்டன

இந்தப் பணி சரியாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கண்காணிக்க மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் உட்பட பல்வேறு முத்தரப்பு குழுக்கள் உள்ளன. கடந்த காலத்தில் பத்து ஆண்டுகளாக இந்த குழுக்கள் அனைத்தும் கூட்டப்படாமலேயே இருந்தன.

திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இந்த குழுக்களின் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாப்பதற்கான பல்வேறு கருத்துக்கள் இவற்றில் முன்வைக்கப்பட்டன. அவற்றை பரிசீலிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் உரிய முயற்சிகளை துறை எடுக்கும் என்று நம்புகிறேன்.

### 480 நாட்கள் பணிபுரிந்தவர்களை நிரந்தரப்படுத்துக!

இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தர படுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசின் நிரந்தர தகுதி அளித்தல் சட்டம் 1982 கூறுகிறது. இந்த மானிய கோரிக்கையில் கூட அந்த சட்டப்படி 270 தொழிலாளர்கள் நிரந்தர படுத்த தீர்ப்பளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் நிரந்தர படுத்தப்பட்டார்களா? என்பது பற்றி கொள்கை குறிப்பில் தகவல் எதுவும் இல்லை.

பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்நாள் முழுக்க வேலை பார்த்தும் நிரந்தரம் செய்யப்படாமல் காண்ட்ராக்ட் என்ற பெயரிலும் அவுட்சோர்சிங் என்ற பெயரிலும் தின கூலிகளாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர் துறை நடத்தும் நல வாரியங்களில் பணிபுரிபவர்களும் தினக்கூலிகள்தான். பொங்கல், தீபாவளி போன்ற திருவிழாக்கள் ஏன் வருகின்றன என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு விடுமுறை உண்டு. ஆனால் அந்த நாளுக்கு சம்பளம் இல்லை.

### அவுட்சோர்சிங் முறையை கைவிடுக!

அண்மையில் தமிழ்நாடு அரசு இடைநிலை மற்றும் கடை நிலை பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களை அதாவது சி அண்ட் டி பணியாளர்களை இனி பணி நியமனம் செய்யாமல் அவுட்சோர்சிங் மூலம் வேலைக்கு எடுப்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை தர ஆணை வெளியிட்டுள்ளது.

அறிக்கை கிடைப்பதற்கு முன்பாகவே நகர்ப்புற உள்ளாட்சி உள்ளிட்ட துறைகளில் அமுலாக்க தொடங்கி விட்டார்கள். அவர்கள் அவுட்சோர்சிங் முறையிலேயே நிறுத்தப்படுவார்கள்.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் இனி துப்புரவு பணிக்கு தொழிலாளர் நியமனம் இல்லை. யாரோ ஒரு முகவர் வாடகைக்கு கொண்டு வந்து தருவார்.

அவர்களுக்கு நிரந்தர ஊழியர்களுக்கான சம்பளம் இல்லை. அதில் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லாத தொகையை தொழிலாளர் துறை குறைந்தபட்ச ஊதியமாக அறிவிக்கிறது. அந்த குறைந்தபட்ச ஊதியமும் இல்லை அதைவிட குறைவாக மாவட்ட ஆட்சியர் ஊதியம் நிர்ணயிக்கிறார். அதுவும் முறையாக வழங்கப்படுவதில்லை, ஒப்பந்தத்தில் தொழிலாளிக்கு என்ன சம்பளம் என்ன சொல்லப்பட்டிருக்கும் அந்த சம்பளத்தையும் கூட ஒப்பந்ததாரர் தர மாட்டார்.

கிராம ஊராட்சிகளில் மாதம் 30 நாளும் பத்து மணி நேரம் வரை வேலை வாங்கிக் கொண்டு பகுதி நேர தொழிலாளர்கள் என்று மாதம் ரூ. 2500 முதல் 7000 வரை துப்புரவு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

பல நூறு ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு, விளிம்பு நிலையில் வைக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களின் ஊதியத்தை பல மட்டங்களில் சுரண்டி எடுத்து எந்த சமூக பாதுகாப்பும் இன்றி அற்றைக் கூலிகளாக அவர்களை வாழ்நாள் முழுவதும் வைத்திருப்பது சமூக நீதி செயலாக யாராவது நினைக்க முடியுமா?

ஒடிசா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஒப்பந்த தொழிலாளி இல்லை என்று அந்த மாநில அரசுகள் முடிவுக்கு வந்துள்ளன. இங்கு நேர்மாறான முடிவு எடுக்கப்படுகிறது.

### குறைந்தபட்ச ஊதியம்: அமலாக்குங்கள்

இந்தியாவிலேயே மிக குறைவாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று என்று ஆய்வு விவரங்கள் தெரிவிக்கின்றன. ஐ.எல்.சி. முடிவுப் படி தொழிலாளர்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதற்கான செலவு எவ்வளவு என சந்தைகளில் விசாரித்து நிர்ணயிப்பதில்லை. மாறாக கண்மூடித்தனமாக எட்டு விழுக்காடு உயர்வு என தொழிலாளர் துறை முடிவு செய்கிறது. அந்த ஊதியத்தையும் தராமல் வேலை அளிப்பவர்களை உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று இழுத்து அடிக்கிறார்கள். அரசு நிர்ண யித்த குறைந்தபட்ச ஊதியத்தை கூட செயலாக்க முடியாத நிலை இருப்பது வருத்தத்துக்குரியது.

மிக அதிகமான பஞ்சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. பஞ்சாலை தொழிலாளர்களுக்கு ஊதியத்தை நிர்ண யிப்பதற்காக அரசு நியமித்த சிறப்பு தொழில் நடுவர் மன்றம் 17 ஆண்டு காலம் ஆகியும் தீர்ப்பு வழங்கவில்லை. இவர்களுக்கு குறைந்தபட்ச கூலியாவது நிர்ணயம் செய்யுங்கள் என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படவில்லை.

### டாஸ்மாக் ஊழியர்கள் குறித்து…

அரசுக்கு ஆண்டுக்கு 45 ஆயிரம் கோடி ரூபாய் வரை ஈட்டி கொடுக்கும் டாஸ்மாக் ஊழியர்கள் தமிழ்நாடு அரசின் கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வருவார்கள். ஆனால் அரசாங்கம் இச்சட்டம் அவர்களுக்கு பொருந்தாது என விதிவிலக்கு அளித்திருக்கிறது. எப்போதும் மதுவின் வாடை நிறைந்த நான்கு பக்கமும் சுவர் கொண்ட சிறிய அறைக்குள் பணிபுரியும் இந்த தொழிலாளர்களிடையே உடல் நலக்குறைவும், இளம் வயது மரணங்களும் அதிகம் உள்ளன.

மாநில அரசை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளிலும் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கப்படுவதில்லை. இந்த சட்டம் மீறல்கள் செய்வதை அதிகாரிகள் பெருமிதமாக கருதுகிறார்கள்.

பல தனியார் ஆலைகளில் தரவேண்டிய சம்பளத்தை மாதக் கணக்காக தராமல் முதலாளிகள் இருக்கிறார்கள். பிஎஃப், இஎஸ்ஐ போன்ற அமைப்புகளுக்கு தொழிலாளர்களிடம் ஊதியப்பிடித்தம் செய்தும் கூட அவற்றை செலுத்த மறுக்கிறார்கள். பழி வாங்குவதற்காகவே பணி மாற்றம் செய்கிறார்கள் இவற்றையெல்லாம் தொழிலாளர் துறை கண்டு கொள்வதில்லை.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் உடனே இது சட்ட விரோதம் என தொழிலாளர் துறை நோட்டீஸ் கொடுக்கிறது. காவல்துறை வந்து கைது செய்கிறது தொழிலாளர்களுக்கு சேர வேண்டியதே விட குறைவாக தொகையை வாங்க ஒப்புக் கொள்ளுமாறு தொழிலாளர்களை வலியுறுத்தி ஒப்பந்தம் செய்கிறது.

### சட்டத் தொகுப்பு விதிகளை கைவிடுக

ஒன்றிய அரசின் வேளாண் சட்டங்களை எதிர்த்து இந்த சட்டப்பேரவையில் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொய்வின்றி வாதாடுகிறது. அதே நேரத்தில் பெரும் முதலாளிகளுக்கு ஆதரவாகவும், தொழிலாளர்களின் உரிமையை பறிப்பதற்கும் 44 சட்டங்களை சுருக்கி நான்கு சட்டத்தொகுப்பு வெளியிட்டது.

ஒன்றிய ஆளும் கட்சியின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ். உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இதனை எதிர்க்கின்றன. தமிழ்நாடு அரசு இயல்பாகவே சட்ட தொகுப்புகளை எதிர்க்க வேண்டும். ஆனால் இந்த சட்ட தொகுப்புகளுக்கு வரைவு விதிகளை தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறை வெளியிட்டது அந்த விதிகளை உறுதி செய்யக்கூடாது என கேட்டுக்கொள்கிறோம்.

தளி தொகுதி தேன்கனிக்கோட்டையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க வேண்டும்.

ஓசூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக தரம் உயர்த்திட வேண்டும்.

### இலக்கிய பேராசான் ஜீவானந்தம் பெயரில் விருது வழங்குக!

பேரவை தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் நெஞ்சுக்கு நிகராக மூன்று பேரை அண்ணா என்று அழைத்தார். பேரறிஞர் அண்ணா, இலக்கிய பேராசான் ஜீவா, பட்டுக்கோட்டை அழகிரி.

அந்த அளவுக்கு கலைஞரோடு நெருங்கிய நட்பு கொண்டவர் ஜீவா அவர்கள். ஜீவா சிவகங்கையில் சிராவயலிலே காந்தி பெயரிலே ஆசிரமம் நடத்தி வந்தார். அப்போது சிராவயலிலே காந்தி ஜீவாவை சந்தித்து, உனக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று கேட்கிறார். அதற்கு இந்த நாடு தான் என்னுடைய சொத்து என்று ஜீவா சொல்கிறார். அதற்கு காந்தி, நீங்கள்தான் இந்த நாட்டுடைய சொத்து என்று ஜீவாவை பார்த்து சொல்கிறார்.

தமிழ், தமிழ் மொழி, தமிழ்நாடு என பெயர் சூட்டியதிலேயே முக்கிய பங்காற்றியவர். தொல்காப்பியம் முதல் கம்பர், இளங்கோவடிகள், வள்ளுவர், பாரதி வரை கற்றறிந்த மாமேதை. தமிழ் இலக்கியத்தை பட்டி தொட்டி எல்லாம் பரப்பிய பண்பாட்டு போராளி. அத்தகைய ஜீவானந்தம் பெயரில் சிறந்த தமிழ் இலக்கிய படைப்பாளிகளுக்கு விருது வழங்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு:

பேரவை தலைவர் அவர்களே, இலக்கிய பேராசான், பொதுவுடைமை போராளி ஜீவா அவர்களுடைய பெருமையை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். போராட்ட வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெருமகன். அவர் சமதர்மம் பொதுவுடைமை கருத்துக்களோடு இணைந்து, கலை, இலக்கியம் முன்னெடுப்புகளின் வாயிலாக அவற்றையும் மக்களிடத்திலே கொண்டு சேர்த்ததில் பெரும் பங்காற்றிய ஒரு மாபெரும் பொதுவுடமை தலைவர் ஜீவா.

ஆகையால், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நான் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமச்சந்திரன்: சிராவயலில் ஜீவாவும், தேசப்பிதா தந்தை மகாத்மா காந்தியடிகளும் சந்தித்த அந்த இடத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அத்தகைய சிறப்பு வாய்ந்த தலைவருக்கு அவர் பெயராலேயே விருதுகள் வழங்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன் நன்றி.

# மம்தாவின் புதிய போராட்டம் "வாஷிங் மிஷின், பாஜக!"




மேற்கு வங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான மம்தா பானர்ஜி கொல்கத்தாவில் நேற்று நடத்திய போராட்டத்தில், 'பா.ஜ.க.' எனப் பெயரிடப்பட்ட சலவை எந்திரம் முக்கிய இடம் பிடித்தது. "வாஷிங் மிஷின், பா.ஜ.க.!" என அங்கு திரண்டிருந்த தொண்டர்கள் முழக்கமிட்டனர்.

போராட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய மம்தா பானர்ஜி, "ஊழல்வாதிகள், திருடர்கள், குற்றவாளிகள் எல்லாம் பா.ஜ.க.வில் சேர்ந்தவுடன் நேர்மையாளர்களாக காட்டப்படுகின்றனர். அவர்களை பா.ஜ.க. காப்பாற்றுகிறது. குற்ற வழக்குகளில் இருந்து விடுவித்து விடுகிறது" என குற்றம் சாட்டினார்.

"பா.ஜ.க. வாஷிங்மிஷின் ஆகிவிட்டது. திருடர்கள், கொள்ளையர்களின் பட்டியலை எடுத்துப் பாருங்கள். அவர்கள் அனைவரும் அங்கே (பா.ஜ.க.) இருப்பது உங்களுக்கே தெரியும். இப்படிப்பட்ட பா.ஜ.க., அரசியலமைப்பு சட்டம் பற்றி செய்து வரும் போதனைகளைக் கேட்க வேண்டுமா?" என ஆவேசத்துடன் கேள்வி எழுப்பினார்.

மேற்கு வங்கத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசையும், பிரதமர் நரேந்திர மோடியையும் கண்டித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மானுடம் வென்றதம்மா



பாரிமுனையிலிருந்து ராயப்பேட்டை செல்வதற்கு அந்த ஆட்டோக்காரர் ரூ.150 கேட்டார். நான் ரூ.100ல் இருந்தேன். பிறகு ரூ.120க்கு உடன்பட்டு, கிளம்பி மேம்பாலத்தின் மீது சென்றுகொண்டிருந்த போது அவர் சட்டென்று வேகத்தைக் குறைத்து நடைபாதையோரத்தில் ஆட்டோவை நிறுத்தினார்.

அங்கே வெயில் சூடு உறைக்காமல் ஒருவன் விழுந்து கிடப்பதை கவனித்தேன். குடித்துவிட்டு விழுந்திருக்கிறான் என்று நினைத்தேன். இல்லையென்று பிறகு தெரிந்தது.

ஆட்டோ டிரைவர் என்னிடம் "உங்க பின்னால மீல்ஸ் பாக்கெட் இருக்கும், அதை எடுங்க சார்" என்றார்.

சீட்டுக்குப் பின்னால் இருந்த அந்த சாப்பாட்டு பொட்டலத்தை வாங்கிக்கொண்டு அவனிடம் சென்று தட்டி எழுப்பினார். அவன் எழவில்லை. மீண்டும் ஆட்டோவுக்கு வந்து அவருடைய இருக்கைக்கு பின்னாலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துவந்து அவன் முகத்தில் தெளித்து அவனை எழுப்பி உட்கார வைத்தார்.

"டேய் கம்னாட்டி... இதோ சாப்பாடு இருக்கு, துண்றா" என்று அவனை உலுக்கினார். அவன் தலை ஆடிக்கொண்டு இருந்தது.

பாட்டிலைத் திறந்து தண்ணீர் புகட்டினார். என் பக்கம் திரும்பி "ஃபைவ் மினிட்ஸ் சார். வந்துர்றேன்" என்றார். பொட்டலத்தை பிரித்து அவன் முன்னால் வைத்தார். சாம்பார் ரசம் பொரியல் கூட்டு எல்லாம் தனித்தனியாக பிளாஸ்டிக் கப்களில் இருந்தன.

கடந்து சென்று கொண்டிருந்த வேறு எவனோ ஒருவன் அருகில் வந்து "நீ போ அண்ணா. நான் பாத்துக்கிறேன்" என்றவனை விரட்டினார்.

அந்த கப்புகளைப் பிரித்து சோற்றில் சாம்பாரை ஊற்றிப் பிசைந்தார்.

அவன் இலையை தன்னிடம் இழுத்துக்கொண்டு சாப்பிட ஆரம்பித்ததும்தான் எழுந்து வந்தார்.

ஆட்டோவைக் கிளப்பியவரிடம் "உங்களுக்கு தெரிஞ்சவரா?" என்று கேட்டேன். "யாரோ எவனோ... யாரு கண்டா...கொஞ்சம் புத்தி மாறாட்டம் போலத் தெரியுது. பசியில உயுந்து கிடக்கிறான்.

நான் தினமும் மதியம் எங்கியாவது நிறுத்தி சாப்பிடறப்போ மூணு பேருக்கு பொட்டலம் வாங்கிவேன் சார்.

இந்த மாரி ரோட்ல உயுந்திருக்கவன் உட்கார்ந்திருக்கவனா பாத்து குட்த்துருவேன். இன்னிக்கு ரெண்டு பேருக்கு குட்த்துட்டேன். இவன் மூணாவது. நம்மால முடிஞ்சது அவ்ளோதான்..." என்றார்.

இந்த மனிதரிடம்தான் முப்பது ரூபாய்க்கு பேரம் பேசியிருக்கிறேன். வெட்கமாக இருந்தது.

மனிதம் இன்னும் மரிக்கவில்லை... இவரைப்போன்ற ஒரு சிலரின் உருவத்தில் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அன்புகூழ் உலகு

– முகநூலில் வந்தது

# பா.ஜ.க.வை
# தேசத்தைப்

**1925ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதில் இருந்து, ஒரு மேம்பட்ட வாழ்க்கைக்கான மக்கள் போராட்டங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் நின்று போராடி வருகிறது. தேசத்திற்காகவும், மக்களுக்காகவும் தியாகங்கள் புரிவது என்று வரும்போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இணையாக எந்த அமைப்பையும் சுட்டிக்காட்டிவிட முடியாது.**

நமது புகழார்ந்த வரலாற்றில், சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக நமது கட்சி உரிமை முழக்கம் செய்துள்ளது; தேசத்தின் செயல்திட்டத்தை ஆக்கப்பூர்வமாக வடிவமைப்பதில் பெரும் பங்காற்றியுள்ளது. நமது போராட்டங்கள் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் மாபெரும் வெற்றிகளை அளித்துள்ளது.

போராடிப் பெற்ற தொழிலாளர் உரிமைகளானாலும், விவசாயிகள் நலன்களானாலும், அவற்றில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு மகத்தானது ஆகும். மக்களுக்காகவும், சமுதாயத்திற்காகவும் ஒப்புயர்வற்ற தியாகங்கள் புரிந்த மாவீரர்களின் செங்குருதியில் தோய்ந்த நமது கீர்த்திமிகு வரலாறு நமக்கு உத்வேகம் அளித்து வருகிறது.

### கேள்விக்குறியான தேசத்தின் இருப்பு

நமது தேசத்தில் ஜனநாயகத்தின் இருப்பு கூட கேள்விக்குறியாகியுள்ளது, முன்னெப்போதும் இல்லாத, ஒரு புதிய சூழலைத் தற்போது நாம் எதிர்கொண்டு வருகிறோம். ஆர்.எஸ். எஸ்ஸின் பிரிவினைவாத செயல்திட்டத்தால் இயக்கப்படும் ஒரு ஆட்சி பல மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் நடைபெறுகிறது. நமது விடுதலைப் போராட்ட இயக்கம் உயர்த்திப் பிடித்த ஒவ்வொரு இலட்சியத்தையும் ஆர்.எஸ். எஸ்ஸின் பிரிவினைவாத செயல்திட்டம் அழித்துக் கொண்டிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ் கட்டவிழ்த்துவிடும் இந்துத்துவ பரப்புரைகள் நமது தேசத்தைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டதிலிருந்து, நமது குடியரசின் மைய விழுமியங்களான மதச்சார்பின்மை மற்றும் சோஷலிசம் ஆகியவை நசுக்கப்படுகின்றன. மனுவாத முறையின் கீழ் சாதிய வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. வரலாற்று ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் பிரிவினர் மீதான பாகுபாடுகள் தற்போது அமைப்பு ரீதியாக வலுப்பெற்று வருகிறது. சலுகைசார் முதலாளித்துவம், அரசாங்கத்தின் ஆதரவுடன் தேசத்தின் விலைமதிப்பற்ற வளங்களைக் கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது.

### ஏப்.14 அரசியல் பரப்புரை இயக்கம்

இந்தச் சூழலில், மக்கள் நலனை முன்னெடுத்துச் செல்ல, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்திட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு முன்மொழிந்துள்ள ஏப்ரல் 14 முதல் மே 15 வரையிலான அரசியல் பரப்புரை முக்கியத்துவம் பெறுகிறது. 2022 அக்டோபர் மாதம் விஜயவாடாவில் நடைபெற்ற கட்சியின் 24 வது அகில இந்திய மாநாட்டில் ஏற்கப்பட்ட அரசியல் தீர்மானத்தில், "நமது செயல்திட்டத்தின் அடிப்படையான கோரிக்கைகளாகப் பொது சுகாதாரம், பொது கல்வி, நிலம், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியவற்றை நாம் முன்னிறுத்தியுள்ளோம்."

குடிமக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் கூட இந்த அரசாங்கம் தோல்வியடைந்திருப்பதை நமது அரசியல் பரப்புரை மக்களிடம் பிரதானமாக எடுத்துரைக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை மையப்படுத்தி, நாம் மக்களை அணிதிரட்ட வேண்டும்.

ஏப்ரல் 14 நமது அரசியலமைப்பின் தலைமைச் சிற்பியும், தனது வாழ்நாள் முழுவதும் சமூக நீதிக்காகவும், சாதி ஒழிப்பிற்காகவும் போராடிய டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் ஆகும். உலகம் முழுவதிலும் உள்ள உழைக்கும் மக்கள் மே மாதம் முதல் நாளைக் கொண்டாடுகிறார்கள். சமூக நீதி மற்றும் சோஷலிசம் குறித்து நமது கட்சி பரப்புரை மேற்கொள்வதுடன், அவற்றுக்காகப் போராட மக்களை அணிதிரட்ட வேண்டும்.

### நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அஞ்சும் மோடி அரசு

தேசிய மற்றும் மாநில அளவில் அண்மைக் காலத்தில் எழுந்துள்ள பிரச்சனைகள் குறித்தும் நமது பரப்புரையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதானி குழும முறைகேடுகள் மீதான ஹிண்டன்பெர்க் அறிக்கை ஒரு சூறாவளியை ஏற்படுத்தியுள்ளது; மோடி அரசாங்கத்தின் சலுகை சார்பை அம்பலப்படுத்தியுள்ளது. அதானி குழும முறைகேடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழுவை அமைத்திட மோடி அரசாங்கம் மறுத்து வருவதே, இந்த முறைகேடுகளுக்கு அரசாங்கம் உடந்தையாக இருப்பதற்கு ஆதாரம் ஆகும்.

நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், நாடாளுமன்ற கூட்டுக் குழுவிலும் கூட பா.ஜ.க விற்குத் தான் பெரும்பான்மை கிடைக்கும். அப்படி இருப்பினும், இந்த முறைகேடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள, நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைத்திட அவர்கள் அஞ்சுகிறார்கள். இதுவே பா.ஜ.கவின் சலுகைசார் முதலாளித்துவ போக்கினை மிகத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது. நமது அரசியல் பரப்புரை இந்தப் பிரச்சனை குறித்தும் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

### விற்கப்படும் தேசிய சொத்துக்கள்

அரசாங்கத்தின் உயர்மட்டங்களில் ஊழல் அமைப்பு ரீதியாகவும், மிகப் பரவலாகவும் தலைவிரித்தாடுகிறது என்பது இந்தப் பிரச்சனையின் மற்றொரு கோணம் ஆகும். நமது குடிமக்களின் கடின உழைப்பாலும், பங்களிப்பாலும் உருவாக்கப்பட்ட தேசிய சொத்துக்கள் மிகக் குறைவான விலைக்கு ஒரு சிலரிடம் விற்கப்படும் அதே காலகட்டத்தில் தேர்தல் பத்திரங்கள் மூலமாக பா.ஜ.க பெரும் நிதியை சேர்த்துக் கொண்டு

# வ முறியடிப்போம்!
# ப் பாதுகாப்போம்!



து.ராஜா Ex.M.P.
பொதுச் செயலாளர், CPI




> ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்திட, மைய விழுமியங்களான, மதச்சார்பின்மை மற்றும் சோசலிசம் ஆகியவற்றை பாதுகாத்திட நமது கட்சியின் தேசியக்குழு அறிவித்துள்ள பிரச்சார பரப்புரையை முக்கியத்தும் வாய்ந்தது. அதனை வெற்றி பெறச் செய்வீர்!

வருகிறது.

மக்களைப் பாதிக்குமே என்ற அக்கறை சிறிதுமின்றிப் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் தனியார்மயமாக்கப்படுகின்றன. எல்.ஐ.சி மற்றும் எஸ்.பி.ஐ போன்ற நிறுவனங்களின் நிதிசார் நேர்மை மற்றும் தன்னாட்சி ஆகியவை அரசாங்கத்தின் சலுகைசார்பு காரணமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இந்த நிறுவனங்களில் இருப்பது பொதுமக்களின் பணம் ஆகும்.

இந்த நிதியைப் பொதுமக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பா.ஜ.கவுடன் நெருக்கமாக இருக்கும் ஒரு சில முதலாளிகளின் நலன்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள். நாட்டு மக்கள் பணவீக்கம் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் போது, அவர்களின் சேமிப்பு பணம் ஊழல் முதலாளிகளின் கஜானாக்களை நிரப்பிட மடைமாற்றம் செய்யப்படுகிறது; நாட்டு மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் நமது பரப்புரை அம்பலப்படுத்துவதுடன், அவற்றுக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்த வேண்டும்.

### சிதைக்கப்படும் நாடாளுமன்ற மரபுகள்

பா.ஜ.க தேர்தல் மூலமாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருந்தாலும், அதன் சித்தாந்த ஊற்றுக்கண்ணாக இருக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பானது தொடக்க காலத்திலிருந்தே ஜனநாயக விரோத அமைப்பாகவே இருந்து வருகிறது. ஆர்.எஸ்.எஸ் சித்தாந்த ஆதிக்கத்தின் காரணமாக, அரசாங்கமே இப்போது ஜனநாயக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுவதுடன், அத்தகைய செயல்பாடுகளை ஊக்கப்படுத்தவும் செய்கிறது. மக்களின் உரிமைகளைத் துச்சமெனப் புறந்தள்ளுவது வழக்கமாகி வருகிறது. நமது குடியரசின் அரசியலமைப்பு வடிவம் தொடர்ந்து சிதைக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற எண்ணிக்கை பெரும்பான்மை தவறாகப் பிரயோகம் செய்யப்பட்டு, நாடாளுமன்றமும் தேவைக்கதிகமான ஒரு அமைப்பாகக் கருதப்படுகிறது. எதிர்த்து குரல் எழுப்புபவர்கள் மீது தேச விரோதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறது. ஊடகங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயல்படுவதுடன், எதிர்கட்சிகளைக் களங்கப்படுத்துகின்றன. நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து தொடர்ந்து பாதிப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும், நமது அரசியல் பரப்புரையின் ஒரு பகுதியாக, பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். இந்துத்துவ சக்திகளின் தாக்குதலில் இருந்து தேசத்தைப் பாதுகாத்திட அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற முழக்கத்தையும் நாம் எழுப்ப வேண்டும்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தியின் தகுதி நீக்கமானது, எதிர் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம், அரசியலமைப்பின் பாற்பட்ட அமைப்புகள் மற்றும் ஜனநாயகத்தின் வருங்காலம் குறித்த பல முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்தச் சம்பவமானது, எதிர்கட்சிகளை அச்சுறுத்திட, எதேச்சதிகார பாசிச ஆட்சியை நிறுவிட ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க அணி தீட்டியுள்ள அபாயகரமான சதித்திட்டத்தை அம்பலப்படுத்துகிறது.

இது போன்ற, மேலும் பல பிரச்சனைகளைப் பற்றி பொதுமக்களிடம் எடுத்துரைக்கவுள்ள நமது அரசியல் பரப்புரை பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்; குறிப்பாக அனைத்து மாவட்டங்களிலும் நடைபயணம் மேற்கொள்ளப்பட வேண்டும். நமது செயல்திட்டத்தை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் அனைத்து மொழிகளிலும் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டும். சமூக ஊடகங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட்டு, பெருந்திரளான மக்களிடம், குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் நமது பரப்புரையின் நோக்கங்கள் சென்றடைந்திட வேண்டும்.

நமது வர்க்க, வெகுஜன, பண்பாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, சமுதாயத்தில் நிலவி வரும் அனைத்து வகையான பிரிவினைகளுக்கு எதிரான ஒற் றுமையின் தேவை மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நிகழ்வுகளைநடத்திட வேண்டும். அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளிடையே சித்தாந்த மற்றும் கொள்கை அடிப்படையிலான ஒற்றுமையைக் கட்டி எழுப்புவதே நமது பரப்புரையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்திட வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க.வை இடதுசாரிகள் மட்டுமே சித்தாந்த ரீதியாக எதிர்கொள்ள முடியும் என்பதையும், மக்களுக்கான, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாற்றை இடதுசாரிகள் மட்டுமே முன்வைக்க முடியும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கருத்தை நமது அரசியல் பரப்புரை மக்களிடம் வெற்றிகரமாக கொண்டு போய்ச் சேர்த்திட வேண்டும்.

நமது தேசத்தின் வரலாற்றில் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்தத் தேர்தலுக்கு முன், சில மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல்கள் நடைபெறவுள்ளன. கர்நாடக மாநில சட்டமன்ற தேர்தலுக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் பா.ஜ.கவிற்கான நுழைவாயிலாக கர்நாடக மாநிலம் கருதப்படுகிறது. அங்கே, மே மாதம் 10 ஆம் நாள் மக்கள் வாக்களிக்க இருக்கிறார்கள். தேசத்தையும், அரசியலமைப்பையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்திட, நடைபெறவுள்ள அனைத்து தேர்தல்களிலும் பா.ஜ.க தோற்கடிக்கப்பட வேண்டும்.

### நெருக்கடிகளை வெற்றி கொள்வோம்

நமது வீரஞ்செறிந்த போராட்டம் மற்றும் மகத்தான தியாகத்தின் வரலாறானது, நம்மை, நமது தேசத்தின் ஜனநாய கட்டமைப்பின் ஒன்றிணைந்த ஓர் அங்கமாக உருப்பெறச் செய்துள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழலில், ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.கவின் பிரிவினைவாத, சுரண்டல் ஆட்சியிடமிருந்து நமது தேசத்தையும், அரசியலமைப்பையும், விளிம்புநிலை மக்களையும் பாதுகாத்திட, தலைமையேற்றுப் போராட வேண்டியது இடதுசாரிகளின் வரலாற்றுக் கடமையாகும்.

செங்கொடி என்றென்றும் மக்களுடன் உறுதிபூண்டு நிற்கிறது. மாற்று செயல்திட்டத்துடன் மக்களை நோக்கிச் செல்லும் நமது அரசியல் பரப்புரை பெரும் வெற்றி பெறும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவதே தற்போதைய தேவை ஆகும். வகுப்புவாத, பாசிச சக்திகளின் சவால்களை எதிர்கொண்டு முறியடிக்கும் வல்லமையைப் போராட்டங்கள் கட்சிக்கு வழங்கும்!

தமிழில்: அருண் அசோகன்

## வினாடி - வினா விடைகள்

1. 30.03.1924 ல் தொடங்கியது.
2. தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி
3. 06.01.1936 ல் ருக்குமணி தேவி அருண்டேல் தொடங்கினார்.
4. 1993 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் கலாச்சார துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.
5. முதல் மே நாள் 1923ல் சென்னையில் கொண்டாடப்பட்டது. கம்யூனிஸ்ட் தலைவர் எம்.சிங்காரவேலர் மே நாளைக் கொண்டாடினார்.
6. சாவர்க்கர் என்ற ஆர்.எஸ்.எஸ். தலைவர்

கடலும் கடற்கரையும் கார்ப்பரேட்டுகளுக்கு விற்கப்படுவதைக் கண்டித்து

# நாடாளுமன்றம் நோக்கி மீனவர் பேரணி, கையெழுத்து இயக்கம்

## அகில இந்திய மீனவ தொழிலாளர் கூட்டமைப்பு முடிவு

அகில இந்திய மீனவர் தொழிலாளர் கூட்டமைப்பின் (ஏஐடியூசி) தேசிய நிர்வாக குழு கூட்டம் சத்ய நாராயண மூர்த்தி தலைமையில் சென்னையில் நடைபெற்றது. கூட்டத்தில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டி. ராஜு செயல்பாட்டு அறிக்கை முன் வைத்தார். கூட்டத்தை ஏஐடியூசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி துவக்கி வைத்தார்.

பின்வரும் தீர்மானத்தை கூட்டம் ஒருமனதாக நிறைவேற்றியது.

நீல பொருளாதாரக் கொள்கை எனும் பெயரில், இந்தியாவின் ஆழ்கடல் மற்றும் கடற்கரையையும், மீன்பிடித் தொழிலையும் முழுமையாக கார்ப்பரேட்டுகளுக்கு விற்க ஒன்றிய அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக இந்தியாவின் கடல் பகுதி ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஆழ் கடல் மற்றும் கடலோரப் பகுதிகளில் சுரங்கங்களை அனுமதிப்பதன் மூலம் பெரும் லாபத்தை கார்ப்பரேட்டுகள் ஈட்டுவதற்கு இது வழிவகை செய்கிறது.

தற்போதுள்ள சட்டத்தின்படி இவர்கள் நினைக்கும் அளவுக்கு கனிம வளங்களை சுரண்டி எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு தடைகள் உள்ளன. எனவே 2002ம் ஆண்டின் கடல் மண்டல கனிம வளங்கள் மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தைத் திருத்தப்படுகிறது.

இதற்கான பொது அறிவிப்பை பிப்ரவரி 9ஆம் தேதி ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது. சட்டத்தைத் திருத்துவதன் மூலம் கனிம வளங்களை எடுக்கும் உரிமத்தை தனியாருக்கு ஏலம் விட ஏற்பாடு செய்துள்ளது. மேலும் இந்திய கடல்களில் உள்ள பல்வேறு வித கனிம வள இருப்புகள் குறித்த மதிப்பீடுகளை இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் (ஜியாலஜிக்கல் சர்வே ஆப் இந்தியா) வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒடிசா, ஆந்திர பிரதேசம், கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா மாநிலங்களின் கடற்கரைகளில் கனிம வளம் கொண்ட மணலும், குஜராத் மகாராஷ்டிரா கடற்கரைகளில் சுண்ணாம்புப் படிவங்களும், கேரளத்தில் கட்டுமானத்திற்கான மணலும் உள்ளன என்பது தெளிவாகிறது. 7.9 கோடி டன் கனிம வளமுள்ள மணலும் 15,399.6 கோடி டன் சுண்ணாம்பு படிவங்களும், 74.5 கோடி டன் கட்டுமானத்துக்கான மணலும் உள்ளன என்று இதில் சொல்லப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பிரச்சினைகள் குறித்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டால், அது வட்டார மொழியில் அந்த பகுதி மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட வேண்டும் என்று பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளன. ஆனால் அவற்றுக்கு விரோதமாக, ஒன்றிய அரசின் சுரங்கத் துறையின் இணையதளத்தில் மட்டும், அதுவும் ஆங்கில மொழியில் மட்டும் இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆழ் கடலிலும், கடற்கரையை ஒட்டிய கடற்பகுதியிலும் இத்தகைய சுரங்கங்களை அனுமதிப்பது மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இது கடலின் ஒட்டுமொத்த சுற்றுச்சூழலை சீர்குலைத்து விடும். மீன்வளம் பாதிக்கப்படுவதோடு, கடலையே சார்ந்துள்ள மீனவர்கள் தமது தொழிலை செய்ய முடியாதபடியும், கடற்கரையோரம் வாழ இயலாத வகையிலும், அவர்களது வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக சீரழித்து விடும். மேலும் இத்தகைய சுரங்க நடவடிக்கைகளால் கடற்கரையும், அதை ஒட்டி வாழும் மக்களும், சொத்துக்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். கடற்கரையைச் சுற்றி ஏராளமான மக்கள் வாழ்கிற கேரளா, கோவா, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும்

எனவே இந்த சட்டத்தை திருத்தும் முயற்சியை எதிர்த்து, கடற்கரைகளைக் கொண்ட மாநிலங்கள் அனைத்திலும் மீனவர்கள், தொழிலாளர்கள், மற்றும் பொது மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்துவது என இக்கூட்டம் முடிவு செய்தது.

இந்த ஆபத்துக்களை விளக்குவதற்காக திறன் வாய்ந்த அறிஞர்களைக் கொண்ட தேசிய அளவிலான கருத்தரங்கத்தை நடத்துவது என்றும் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி ஒன்றை இந்திய மீனவர்களைத் திரட்டி நடத்துவது என்றும் கூட்டம் முடிவு செய்தது.

இந்த கூட்டத்தில் ஏ.கே. ஜபார், ராயப்பன், எலிசபெத் அசிசி, பி.சின்னத்தம்பி, எஸ்.முருகானந்தம், சி.ஆர். செந்தில்வேல், காளிதாஸ் உள்ளிட்ட கடல் சார்ந்த மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில்

# நிலக்கரி எடுக்க ஒன்றிய அரசு அனுமதி!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

டெல்டா மாவட்டங்கள் நதிநீர் பாசனம் மற்றும் ஆழ்குழாய் நீரை நம்பி பிரதான தொழில் வருமானமாக வேளாண்மை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. பாரம்பரியமாக பல தலைமுறைகள் இப்படி வாழ்ந்து வரும் நிலையில் இந்த சூழலையே புரட்டிப் போட்டு மக்களின் வாழ்வு நிலையை சீர்குலைத்திட ஹைட்ரோ கார்பன் எடுப்பது என்கிற ஒற்றைச் சாளர ஏலம் மூலம் ஒன்றிய அரசு ஒப்பந்தங்களை வழங்கிட செய்தது. ஒரே ஒரு உரிமத்தில் அனைத்து இயற்கை வாயுக்களையும் படிமங்களையும் எடுக்க இந்த முறை அனுமதிக்கிறது. மன்னார்குடி பகுதியில் நிரம்பி உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்ட நிலக்கரியை எடுத்திட ஒன்றிய அரசு திட்டமிட்டது. இந்த நிலக்கரி படிமங்களின் ஊடே புதைந்திருக்கும் மீத்தேன் வாயுவை எடுத்தால் தான் நிலக்கரி எடுக்க முடியும் என்கிற நிலையில் தி கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் என்கிற ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு கிஞ்சிற்றும் மக்களைப் பற்றி கவலைப்படாது அனுமதி வழங்கியது. மாவட்டங்களின் பேரழிவு திட்டமாக வருகிற இந்த அனுமதியையும் திட்ட அமலாக்கத்தையும் எதிர்த்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட அனைத்து அமைப்புகள் மற்றும் விவசாயிகளும் தொடர்ந்து போராடியதின் விளைவாய் அன்றைக்கு மாநில ஆளும் பொறுப்பில் இருந்த அரசு இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து அதன் பின் தான் டெல்டா மாவட்டங்களின் நிரந்தர பாதுகாப்புக்காக காவேரி டெல்டா என்பது வேளாண் தொழிலுக்கான ஒரு பாதுகாப்பு மண்டலம் என்று அறிவித்தது. அது இன்றும் அமுலில் இருக்கிறது என்பதுடன் தமிழக முதல்வர் தலைமையில் இந்த குழு கூடி டெல்டா பாதுகாப்பிற்காக மேலும் சில வரையறைகளை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலையில் தான் ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசையோ, சட்டப்படி அமையப் பெற்ற வேளாண் மண்டலத்தை பற்றியோ கவலைப்படாது தன் விருப்பத்திற்கு தஞ்சாவூர், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் நிலக்கரி எடுப்பதற்கான ஒப்பந்தத்தை கோரியிருக்கிறது. அதற்கான ஆய்வு திட்டத்தை தொடங்கிட இருக்கிறது. ஒன்றிய அரசின் இந்த பொறுப்பற்ற செயலை மக்களைப் பற்றி கவலைப்படாத, அக்கறையில்லாத போக்கை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டிக்கிறது. ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தை தொடக்க நிலையிலேயே திரும்ப பெற்றிட வேண்டும்.

ஒன்றிய அரசு கொண்டு வந்த புதிய சட்ட திருத்தத்தின்படி மத்திய சுற்றுச்சூழல் துறையின் அனுமதியை மட்டுமே பெற்று மாநிலங்களில் இப்படியான திட்டங்களை தொடங்கலாம். மாநில சுற்றுச்சூழல் துறை அனுமதி தேவையில்லை. இப்படி அமல்படுத்தப்படும் திட்டம் செயலாக்கத்தின் பொழுது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அந்த கம்பெனியே பொறுப்பு ஏற்க வேண்டும் என்கிற ஒரு புதிய திருத்தத்தின்படி இந்த திட்டம் அமலாக்கப்படுவதாக தெரிகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசை மதிக்காத இப்படியான சட்ட திருத்தத்தை அன்றைக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எதிர்த்தது.

ஆகவே தமிழ்நாடு அரசு உடனடியாக இந்த திட்டங்களை தொடக்க நிலையிலேயே ரத்து செய்திட உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். சிவகங்கையில் ஏப்ரல் 3, 4 இரு நாட்கள் நடைபெற்ற சங்கத்தின் மாநிலக் கூட்டத்திலும் இதை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# நரிக்குறவர் இன பழங்குடி மக்களுக்கு திரையரங்கத்தில் அனுமதி மறுப்பு

## பழங்குடி மக்கள் சங்கம் கண்டனம்

சென்னையிலுள்ள "ரோஹிணி" திரையரங்கில் "பத்து தல" என்ற திரைப்படத்தைப் பார்க்கச் சென்ற நரிக்குறவர் இன பழங்குடி மக்கள் திரையரங்கத்தினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு, தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி திரையரங்கத்தில் திரைப்படம் பார்க்க வந்த ஏனைய ரசிகர்களைப் போலவே, நரிக்குறவர்களும் பணம் செலுத்தி டிக்கட் பெற்று திரையரங்கித்திற்கு செல்ல முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சமுதயத்தின் கடைக்கோடி மக்களாக வாழுகின்ற பழங்குடி மக்களாகிய நரிக்குறவர் இன மக்களுக்கு திரைப்படம் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட செயலை எமது தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இருபத்தியோராம் நூற்றாண்டிலும் இது போன்ற நவீன தீண்டாமையை கடைப் பிடிக்கும் நபர்கள் மீது தமிழக அரசும், காவல் துறையும் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டிக்க வேண்டும் என்று எமது தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் கோருகிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க துணை செயலாளர் ஜா.பூபாலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# சுங்கக் கட்டணம் உயர்வு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்




நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ரத்த நாளங்களாக விளங்குவது சாலை போக்குவரத்தாகும். வாகனங்கள் பெருகி வரும் எண்ணிக்கைக்கு தக்கபடி சாலைகள் அமைப்பது, விரிவு படுத்துவது, மேம்பாலங்கள் போன்ற கட்டமைப்புகள் மேம்படுத்துவது என அத்தியாவசியப் பணிகளை பாஜக ஒன்றிய அரசு கை கழுவி விட்டது. சாலைகள், பாலங்கள் போன்ற கட்டமைப்புப் பணிகள் தனியாருக்கு தாரை வார்த்து விட்டது. தனியார் நிறுவனங்கள் நாடெங்கும் சுங்கச் சாவடிகள் அமைத்து கடுமையான கட்டணங்கள் வசூலித்து வருகின்றன.

தனியார் நிறுவனங்கள் ஆண்டுக்கு இருமுறை கட்டணங்களை உயர்த்தி சட்டப்பூர்வ கொள்ளையடிக்க பா.ஜ.க. ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ் சாலைத்துறை ஆணையம் பச்சைக் கொடி காட்டியுள்ளது. சுங்க சாவடிகள் வழியாக செல்லும் வாகனங்கள் வழக்கமாக செலுத்தும் கட்டணத்தோடு கூடுதலாக ரூபாய் 60 வரை செலுத்த வேண்டும். பாஸ்ட்டாக் என்ற முறையில் முன்கட்டணம் (Free paid) செலுத்தும் முறைக்கு செல்லாத வாகனங்கள் இரட்டிப்பு கட்டணம் செலுத்த வேண்டும் என்ற நிர்பந்தத்திற்கு வாகன உரிமைதாரர்களும், பயனாளிகளும் ஆளாகியுள்ளனர். பல சுங்கச் சாவடிகள் சட்டவிரோதமாக இயங்கி வருவதாக புகார்களும் எழுந்துள்ளன.

சேவைச் சாலைகள் அமைக்காமலும், தரமான சாலை அமைக்காமலும் ஊழலில் ஊறிப்போன அதிகார வர்க்கமும், தனியார் நிறுவனங்களும் கூட்டாக மக்களின் தலையில் சுமை ஏற்றுவதை வேடிக்கை பார்த்து வரும் பாஜக ஒன்றிய அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், சுங்கசாவடிகளை நீக்கி, மக்கள் சுதந்திரமாக பயணிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பள்ளிகளில் பாலியல் வன்முறை

# இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

ஒன்றிய அரசின் கலாச்சாரத்துறையின் கீழ் சென்னையில் இயங்கி வரும் கலாஷேத்ரா அறக்கட்டளையினர் நடத்தும் பள்ளி, கல்லூரி களில் பாலியல் வன்முறை நடப்பதாக புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக தேசிய மகளிர் ஆணையம் தானாக முன் வந்து புகார் கொடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து மாநில மகளிர் ஆணையத் தலைவரும் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சட்டப் பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானம் மீது பேசிய முதலமைச்சர் "விசாரணையில் குற்றவாளிகள் உறுதியானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என உறுதியளித்துள்ளார். பள்ளிகள், கல்லூரிகளில் நடைபெறும் பாலியல் வன்முறைகளை தமிழ்நாடு அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பொருளாதாரம்



# ஏன் விலைவாசி குறையவில்லை?

## ரிசர்வ் வங்கி முன்னாள் துணை ஆளுநர் விளக்கம்

“சிறிய நடுத்தர தொழில் உள்ளூர் தொழில்களை வளர விடாமல் தடுத்தும், தேய்த்தும் தான் ரிலையன்ஸ் குழுமம், டாடா குழுமம், ஆதித்யா பிர்லா குழுமம், அதானி குழுமம் மற்றும் பார்தி டெலிகாம் ஆகிய “பிக் 5” பெரும் வளர்ச்சியை கண்டுள்ளன.

அதே நேரத்தில், இறக்குமதிக்கான வரிகளை விண்முட்டும் அளவுக்கு உயர்த்தி, இந்த ஐந்து கம்பெனிகளுக்கும் போட்டியாக வெளிநாட்டு உற்பத்தி பொருட்கள் இந்தியாவுக்கு வந்துவிடாமலும் அரசு பாதுகாக்கிறது.

இந்த ஐந்து நிறுவனங்களையும் தேசிய சாம்பியன்களாக நிலை நிறுத்துவதற்கு, உள்நாட்டில் விலைவாசி குறைந்து விடாமல் உயர்ந்து செல்லும் வகையில் இந்தியாவின் தொழில் கொள்கை வடிவமைக்கப்பட்டு இருக்கிறது.

உலோகங்கள், கோக், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், சில்லறை வர்த்தகம் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றின் உற்பத்தியை இந்த ஐந்து முதலாளிகளும் முழுமையாகக் கட்டுப்படுத்துவதால், விலைவாசி குறைந்து விடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

கடந்த ஆண்டின் விநியோக சங்கிலியில் ஏற்பட்ட சிக்கல்கள் தளர்ந்த பிறகு, உலக அளவில் விலைவாசி குறைந்தாலும், இந்தியாவில் பொருட்களின் பணவீக்கம் அதிகமாகவே உள்ளது. அதாவது விலை உயர்வு இன்னும் அதிகரிக்கிறது.

இந்த முதலாளிகளின் பலம் அதிகரிக்க, அதிகரிக்க, பணவீக்கத்தை இன்னும் நிலையானதாக்கிவிடும். (அதாவது விலைவாசி குறைவதற்கு வாய்ப்பே இல்லை)

**– இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் விரால் ஆச்சார்யா.**

# அரசுப் பேருந்துகளை இயக்க தனியார் ஓட்டுநர்கள்!

## ஏஐடியூசி உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

கும்பகோணம் கோட்டத்தில் மாநில அரசுப் பேருந்துகளை இயக்கும் பணியை ஒப்பந்த ஓட்டுநர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

கும்பகோணம் கோட்டத்தில் இருந்து திருச்சி, கரூர், காரைக்குடி, கும்பகோணம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு அரசுப் பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்பட்டு வருகின்றன.

தினசரி பேருந்து சேவைகளின் எண்ணிக்கை 3,184 எனபுள்ளி விவரம் தெரிவிக்கிறது. ஓட்டுநர்கள் பற்றாக்குறை, வாகனங்கள் பழுது, ஓட்டுநர்கள் பணிக்கு வராதது உள்ளிட்ட காரணங்களால் தினந்தோறும் சுமார் 250 பேருந்துகளை இயக்க முடியவில்லை என கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குநர் எஸ்.ராஜமோகன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசுப் பேருந்துகளை இயக்கும் பணியை அவுட்சோர்சிங் செய்ய முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசுப் பேருந்துகளை ஓட்டும் பணியை ஒப்பந்த ஓட்டுநர்களிடம் ஒப்படைக்கமுடிவு செய்யப்பட்டுள்ளது.

தினந்தோறும் இவ்வாறு 100 ஓட்டுநர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றனர். இதற்காக ஒப்பந்த ஓட்டுநர்கள் தேர்வு செய்யப்பட இருக்கின்றனர். இந்த ஓட்டுநர்களுக்கு குறைந்தபட்சம் 18 மாத அனுபவம் இருக்க வேண்டும் என தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்த ஓட்டுநர்களின் வயது 24 முதல் 40க்குள் இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு ஏஐடியூசி, சிஐடியு உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்த ஓட்டுநர்கள் முறை எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்பதில் தொழிற்சங்க நிர்வாகிகள் உறுதியாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலை பெறும் சட்டபூர்வ உரிமையை பறிக்கும் பாஜக ஒன்றிய அரசு

## தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் கண்டனம்

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நா.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஊரகப் பகுதி உழைக்கும் மக்களின் முன்னோடி திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை பா.ஜ.க. எதிர்கட்சி நிலையில் இருந்த காலத்தில் கடுமையாக எதிர்த்து வந்தது. கடந்த 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தையும், அதன் கீழ் நடைபெறும் திட்டப்பணிகளையும் சிதைத்து அழித்து வருகிறது.

நாடு முழுவதும் உள்ள ஊரகப் பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் ஆண்டுக்கு நூறு நாள் வேலை பெறுவதற்கு சட்டபூர்வ உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் அடித்தட்டில் வாழும் மக்கள் சட்டபூர்வ உரிமை பெறுவதை சகித்துக் கொள்ள முடியாத “மனுவாதிகள்” உடலுழைப்புக்கு முன்னுரிமை தராத, ஒப்பந்ததாரர்கள் நுழைந்து கொள்ள அடிக்க வழிவகை செய்யும் பல்வேறு திருத்தங்களை செய்துள்ளனர்.

தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் 20 ஆயிரத்துக்கும் அதிகமான “அங்கன்வாடி மையங்கள்” கட்டப்படும் என ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதாவது கட்டப்படும் நான்கு அங்கன்வாடி மையங்களில் மூன்று மையங்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தில் கட்டப்படும் என்றும், ரூபாய் 12 லட்சம் மதிப்பில் கட்டப்படும் அங்கன்வாடி மையத்திற்கு தலா 8 லட்சம் ரூபாய் வேலை உறுதியளிப்புத் திட்ட நிதியில் இருந்து எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கு (2023 24) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த நிதி ரூ 60 ஆயிரம் கோடி, இதில் இதுவரை வேலை செய்த தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியப் பாக்கி ரூபாய் 17 ஆயிரம் கோடி, இத்துடன் 20 ஆயிரம் அங்கன் வாடி மையங்களுக்கு தலா ரூ.8 லட்சம் வீதம் சுமார் ரூ. 1700 கோடி ஒதுக்கீடு செய்துவிட்டால், நடப்பாண்டில் வேலை அட்டை பெற்ற தொழிலாளர்களுக்கு பெயரளவில் மட்டுமே வேலை வழங்க முடியும். இதன் மூலம் தொழிலாளர்கள் சோர்வடைந்து சலிப்புற்று, திட்டத்தை விட்டு வெளியேற நிர்பந்திக்கும் வஞ்சகச் செயலில் ஒன்றிய அரசு ஈடுபடுவதை தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், வேலை அட்டை பெற்றுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் சட்டப்படி வேலை பெறும் உரிமையை மறுக்காமல் வேலை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# போஸ்டர் ஒட்டினால் சிறை

குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் “மோடியை அகற்று! நாட்டைக் காப்பாற்று!” (மோடி ஹட்டாவோ; தேஷ் பச்சாவோ) என்ற வாசகம் இடம்பெற்ற சுவரொட்டிகளை ஆம்ஆத்மி கட்சியினர் ஒட்டினர். இதனையடுத்து, அகமதாபாத் நகரின் பல்வேறு காவல் நிலையங்களில் சுவரொட்டிகள் ஒட்டியதற்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஆம்ஆத்மி கட்சியினர் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று, கடந்த வாரம் “மோடியை அகற்று! நாட்டைக் காப்பாற்று!” (மோடி ஹட்டாவோ; தேஷ் பச்சாவோ) என்ற வாசகங்களுடன் 11 மொழிகளில் டெல்லி மாநகர் முழுவதும் ஆம்ஆத்மி கட்சியினர் சுவரொட்டிகள் ஒட்டினர். அடுத்த சில நாட்களில் பிரதமர் மோடியின் கல்வித் தகுதி தொடர்பாக டெல்லியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அதில் “இந்திய பிரதமர் படித்தவராக இருக்க வேண்டும்“ (க்யா பாரத் கே பிரதான் மந்திரி பதே லிகே ஹோனே சாஹியே) என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து, டெல்லி மாநகரின் பல்வேறு காவல் நிலையங்களில் நூறுக்கும் மேற்பட்ட வழக்குகளைப் பதிவு செய்த டெல்லி காவல்துறை, ஆறு பேரை கைது செய்துள்ளது. அவர்களில் இருவர் அச்சக உரிமையாளர்கள்.

சுவரொட்டிகளை ஒட்டி பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்ததாகவும் சுவரொட்டியில் அச்சகத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை என்பதற்காகவும் அவர்களை கைது செய்ததாக டெல்லி காவல்துறை விளக்கம் அளித்துள்ளது.

காவல்துறையின் இந்த நடவடிக்கைக்கு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். “ஜனநாயகத்தில் சுவரொட்டிகள் ஒட்டுவது சாதாரணமாக நடக்கக்கூடிய ஒன்றுதான். இதைக் கண்டு பிரதமர் மோடி பயப்படுவது ஏன்?” என காட்டமுடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றியபாஜகஅரசுவிமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது; பிரதமர் நரேந்திர மோடி விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர். அரசாங்கத்தையோ, பிரதமரையோ கேள்வி கேட்டால், விமர்சித்தால் தேசபக்தி இல்லாதவர்கள் என முத்திரை குத்தப்படும். அடுத்து, காவல்துறையால் கைது செய்யப்படுவார்கள். இதுதான் டெல்லி, குஜராத் போன்ற மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கிறது. இம் என்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம் என்பது பாசிசத்தின் தொடக்கம். அதைத்தான் இங்கும் பார்க்க முடிகிறது.

# 12 ஆம் வகுப்பு பாடத்தில் மத வெறுப்பு அரசியலை புகுத்தும் பா.ஜ.க.

## கலை இலக்கியப் பெருமன்றம் கண்டனம்

மாற்றம் செய்கிறோம் என்ற பெயரில் 12ஆம் வகுப்பு வரலாற்றுப் பாடத்தில் மத வெறுப்பு அரசியலை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு புகுத்தியுள்ளதை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற பொதுச் செயலாளர் த.அறம் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (National Council of Education Research and Training NCERT) பன்னிரண்டாம் வகுப்பு வரலாற்றுப் பாடத்தில் மாற்றங்களை கொண்டு வருகிறோம் என்ற பெயரில் மத வெறுப்பு அரசியலை பாடத்திட்டத்தில் புகுத்தியுள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு வரலாற்றுப் பாடத்தில் இந்திய வரலாற்றின் கருப்பொருள்கள் பகுதி2ல் (Themes of Indian History- Part-2), ‘மன்னர்களும், வரலாறுகளும். முகலாயர்களின் அரசாட்சி’ (‘Kings and Chronicles:The Mugal Courts’) பாடங்களை வரலாற்று நூலிலிருந்து நீக்கியுள்ளனர்.

இதுகுறித்து NCERT இயக்குனர் திரு.தினேஷ் பிரசாத் சக்லானி அவர்கள் ‘கொரனோ காலத்தில் மாணவர்களின் படிப்பு சுமையை குறைப்பதற்காகவும், மன உளைச்சலை குறைப்பதற்காகவும் பாடத்திட்டங்களை குறைக்க முடிவு செய்தோம். அதன் அடிப்படையிலேயே இந்த மாற்றங்கள் நடைபெற்றுள்ளன என்றும், பாடத்திட்டங்களை பகுத்தறிவு பூர்வமானதாக மாற்றுவதற்காக இதை செய்ததாகவும், தேசிய கல்விக் கொள்கை 2020 வழிகாட்டிய படி பாடச் சுமையை குறைப்பதற்காக செய்ததாகவும், இதில் வேறு எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமல்லாமல் பத்தாவது வகுப்பில் ஜனநாயக அரசியல்2 (‘Democratic Politics -2’) என்ற பாடத்தில் ‘ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவம்‘ (‘Democracy and Diversity’), ஜனநாயகத்தின் சவால்கள் (Challenges of Democracy’), பற்றிய பாடங்களும், பிரபலமான போராட்டங்களும், இயக்கங்களும்‘ (‘Popular Struggles and Movements’) என்ற பாடமும் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் பதினொன்றாம் வகுப்பு பாடத்திட்டத்தில் உலக வரலாற்றின் கருப்பொருள்கள்’ (‘Themes in World History’) என்ற பகுதியில் உள்ள ‘மத்திய இஸ்லாமிய நாடுகள்’ (‘Central Islamic Lands’) என்ற பாடமும், ‘தொழில் புரட்சி’ (‘Industrial Revolution’) என்ற பாடமும் ‘கலாச்சாரங்களுக்கு இடையிலான மோதல்’ (‘Class of Cultures’) என்ற பாடமும் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் உத்தரப்பிரதேச மாநிலப் பாடத்திட்டத்தில் ‘உயிரின பெருக்கம்‘ (‘Reproduction ofOrganisms’) என்ற பாடமும் நீக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் பள்ளியில் பயிலும் மாணவர்களிடையே ஒரு மதம் குறித்த வரலாறுகளை மறைப்பதாக உள்ளது. ஜனநாயகம், சகிப்புத்தன்மை மற்றும் பன்மைத்துவத்தை மாணவர்களிடையே வளர்ப்பதற்கு பதிலாக அதை சிதைப்பதாக உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அறிவியல் மனப்பான்மையை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையாக உள்ளது. எனவே தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக கைவிடுமாறு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெயரளவில் வேலை உறுதியளிப்பு திட்டம்

## விவசாய தொழிலாளர் சங்கம் புகார்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் பெயரளவில் மட்டுமே செயல்படுத்தப்படுவதாக தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் பொதுச் செயலர் நா.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

2014 ஆம் ஆண்டில் பாஜக ஆட்சிக்கு வந்தப்பின் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தையும், அதன் கீழ் நடைபெறும் திட்டப் பணிகளையும் சிதைத்து வருகிறது. நாடு முழுவதும் உள்ள ஊரகப்பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு நூறு நாள் வேலை பெற சட்டபூர்வ உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதில் உடலுழைப்புக்கு முன்னுரிமை தராமல் ஒப்பந்ததாரர்கள் நுழைந்து கொள்ள வழிவகை செய்யும் வகையில் திட்டத்தில் மத்திய அரசு திருத்தம் செய்துள்ளது.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் 20 ஆயிரத்துக்கும் அதிகமான 'அங்கன்வாடி மையங்கள்' கட்டப்படும் என மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துக்கு ரூ.60,000 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியப் பாக்கி ரூ.17,000 கோடி, இத்துடன் 20,000 அங்கன் வாடி மையங்களுக்கு தலா ரூ.8 லட்சம் வீதம் சுமார் ரூ. 1,700 கோடி ஒதுக்கீடு செய்துவிட்டால், நிகழாண்டில் வேலை அட்டை பெற்ற தொழிலாளர்களுக்கு பெயரளவில் மட்டுமே வேலை வழங்க முடியும்.

இதனால், உடல் உழைப்புத் தொழிலாளர்கள் திட்டத்தை விட்டு வெளியேறும் சூழல் உருவாகும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இந்திய நாடக இயக்க வளர்ச்சியில்

# பாதல் சர்க்காரும் 3ஆம் அரங்கமும்

## த.க.இ.பெ. கருத்தரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன் றத்தின் காஞ்சிபுரம் மாவட்டக் குழு சார்பில், தாம்பரம் அவ்வை நடுநிலைப்பள்ளி அரங்கில், "பாதல் சர்க்காரும் மூன்றாம் அரங்கமும்" என்ற தலைப்பில் உலக நாடக நாள் சிறப்பு கருத்தரங்கம் தாம்பரம் கிளைத் தலைவர் எம். இரத்தினமாலா தலைமையில் நடைபெற்றது. இதில் நவீன நாடகக் கலைஞரும், நாடக இயக்க ஆர்வலரும், கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில குழு உறுப்பினருமான ஆ.பாஸ்கர் கருத்துரையாற்றினார்.

கலை இலக்கிய பெருமன்றத்தின் காஞ்சி மாவட்ட தலைவர் இராமலிங்கம், செயலாளர் மருத்துவர் சாந்தி, மாநிலக் குழு உறுப்பினர்கள் டி.எஸ். நடராஜன், சங்கர நாராயணன் உள்ளிட்ட பலரும் வாழ்த்தி பேசினர்.

மாநில தலைமைக்குழு உறுப்பினர் ஜீவா மணிக்குமார் புத்தகங்களை வழங்கி கருத்தாளர்களை சிறப்பித்தார். கலை இலக்கிய பெருமன்றத்தின் பல்லாவரம் கிளைத் தொடக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஏராளமான இலக்கிய அன்பர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# திருச்சியில் கோடைகால நீர் மோர் பந்தல் திறப்பு!

திருச்சி மனிதம் சமூகப் பணி மையம் சார்பில் அருணா தியேட்டர் அருகில் 7ம் ஆண்டு தண்ணீர் பந்தல் திறப்பு விழா ஜி. ஆர்.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதற்கு தாஸ் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு கலந்துகொண்டு துவக்கி வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர்கள் நா.பெரியசாமி, மூ.வீரபாண்டியன், மத்திய கட்டுபாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் ஆகியோர் உரையாற்றினர். இதில் மேயர் மு. அன்பழகன், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட பொது செயலாளர் க.சுரேஷ், மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் க.இப்ராகிம், பகுதி செயலாளர் இரா.சுரேஷ்முத்துசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## கே.பாலதண்டாயுதம் பிறந்தநாள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மேற்கு பகுதி குழுவின் சார்பாக தியாக சீலர் தோழர் பாலதண்டாயுதம் பிறந்தநாள் விழா 23 வது வார்டு கிளை செயலாளர் க.முருகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ம.செல்வராஜ், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் க.இப்ராகிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் சார்பில்

# கவன ஈர்ப்பு உண்ணாவிரதம்




தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் சார்பாக ஏப்.4 அன்று சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் அரங்கில், தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், ஒரு நாள் அடையாள உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்திற்கு தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க மாநில தலைவர் ஜெயக்குமார் தலைமை தாங்கினார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் துவக்க உரையாற்றினார்.

ஏ.ஐ.டி.யூ.சி. மாநிலச் செயலாளர் ஏ.பாஸ்கர், தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் டீ.பத்மநாபராவ் ஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர்.

மருத்துவத்துறை பணியாளர் சங்க கூட்டமைப்பு பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சங்க மாநில தலைவர் எம் வைத்தியலிங்கம், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுனர்கள் சங்க மாநில தலைவர் வி.விஜயகுமாரன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.சங்கரன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் சங்க பொதுச் செயலாளர் எஸ். சிவகுரு, தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நட்புணர்கள் சங்க மாநிலச் செயலாளர் கோபிநாத் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

# கோவில் மனை குடியிருப்போர் சங்கம் ஏப்ரல் 11ல் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு கோவில்மனையில் குடியிருப்போர் சங்கத்தின் திருவாரூர் மாவட்டக்குழு கூட்டம் திருத்துறைப்பூண்டி பி.எஸ்.ஆர். நினைவு இல்லத்தில் மன்னார்குடி பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் உள்ள 9 ஒன்றியங்களில் 6 ஒன்றியங்களில் இருந்து 50க்கும் மேற்பட்டோர் மற்றும் முன்னணிப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, திருவாரூர் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் வை.செல்வராஜ், வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் அ.பாஸ்கர், கோவில் மனையில் குடியிருப்போர் சங்க மாநிலச் செயலாளர் ஜெ.அன்பழகன், துணைத் தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

25.03.2023 அன்று தஞ்சையில் நடைபெற்ற மாநிலக்குழு தீர்மானங்களை விளக்கி மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை பேசினார்.

நடந்து முடிந்த வேலை அறிக்கை மற்றும் நடக்க இருக்கிற போராட்டங்கள் பற்றியும் மாவட்டச் செயலாளர் பி.வி.சந்திரராமன் பேசினார்.

ஏப்ரல் 11 அன்று இந்து அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கோவில்கள் அனைத்திலும் அறநிலையத்துறை அதிகாரிக்கு (இ.ஓ.) கோரிக்கை மனு கொடுப்பது, அதன் பின் அன்று மாலை கோவில் மனையில் குடியிருப்போர் பங்குபெறும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

9 ஒன்றியங்களில் பிரச்சாரம் செய்யும் வகையில் 20 ஆயிரம் துண்டறிக்கைகள், 1000 போஸ்டர்கள் மற்றும் 25 ஆயிரம் பேர்களை பங்குபெறச் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

கோவில் மனையில் குடியிருப்போர் சங்க மாநில பொதுச் செயலாளர் வை.சிவபுண்ணியம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி, கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., அ.பாஸ்கர், பி.வி.சந்திரராமன் ஆகியோர் போராட்டத்திற்கு தலைமை தாங்குவர்.

# தமிழ்நாடு போக்குவரத்து ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஓய்வூதியர்கள் ஏஐடியூசி சம்மேளனத்தின் அறிவிப்பின்படி அரசு பொறுப்பேற்று ஓய்வூதிய வழங்கவும், அகவிலைப்படி வழக்கில் நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்திடவும் வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும், அனைத்து மண்டல அலுவலகங்களின் முன்பு போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூரில் ஜெபமாலைபுரம் போக்குவரத்து நகர் கிளை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஓய்வு பெற்றறோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை தலைமை வகித்தார். சங்கத் தலைவர் மல்லி.ஜி.தியாகராஜன் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் க.அன்பழகன், அரசு போக்குவரத்து ஓய்வூதியர் சம்மேளனத்தின் துணைத் தலைவர் துரை. மதிவாணன், கௌரவத் தலைவர் ஜெ.சந்திரமோகன் ஆகியோர் உரையாற்றினர். முடிவில் பொருளாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் அரசு ஓய்வூதியர்கள் மற்றும் பொதுத் துறை ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயரும் போதெல்லாம் ஓய்வூதியத்துடன் இணைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து பென்சன் விதியில் அகவிலைப்படி உயர்வு சட்ட உரிமை என குறிப்பிடப்பட்டும், கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் உயர்ந்துவிட்ட பழைய, புதிய அகவிலைப்படி உயர்வுகள் இன்று வரை வழங்கப்படவில்லை. உடனடியாக நீதிமன்றதீர்ப்பின்படி அகவிலைப்படி உயர்வு வழங்கிடவும், போக்குவரத்து கழகங்களில் காலியாக உள்ள ஓட்டுனர், நடத்தினர், தொழில்நுட்ப பணியாளர் காலிபணியிடங்களை நேரடி நியமனம் மூலம் உடனே நிரப்பிடவும், நிறுத்தப்பட்ட அனைத்து பேருந்துகளையும் இயக்கிடவும், பேருந்து பணிமனைகள், பேருந்துகள் இயக்கம் உள்ளிட்டு தனியாருக்கு விடும் தனியார்மய நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட நீண்ட கால கோரிக்கைகளில் முதல்வர் தலையிட்டு தீர்வினை அறிவிக்க மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

# எஸ்.பி.முத்துக்குமரன் 11ஆம் ஆண்டு நினைவேந்தல்



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசலில் எஸ்.பி.முத்துக்குமரன் எக்ஸ். எம்.எல்.ஏ 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் அன்னவாசல் ஒன்றியம், சொக்கநாதன் பட்டி நினைவிடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் ஏ.நாகராஜ் தலைமையில் நடைபெற்றது.

முத்துக்குமரன் மனைவி சுசிலா, மகள் நர்மதா மற்றும் குடும்பத்தினர், கட்சியின் மாவட்ட செயலாளர் த.செங்கோடன், துணைச் செயலாளர் கே.ஆர்.தர்மராஜன், பொருளாளர் என்.ஆர்.ஜீவானந்தம், மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் எஸ்.சோமையா, திமுக அன்னவாசல் நகர செயலாளர் எம்.எஸ். அக்பரலி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

### தலித், பழங்குடி மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை கண்டித்து

# மாநிலத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்

### தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலக்குழு முடிவு

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக்குழு கூட்டம் மார்ச் 3 அன்று திருச்சி ப.மாணிக்கம் இல்லத்தில் தேசியத் துணைத் தலைவர் பொ.லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டச் செயலாளர் சு.பழனிக்குமார் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அமைப்பின் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் இன்றைய நிலை, எதிர்கால அமைப்பு நிலை குறித்துப் பேசினார். தேசியக்குழு முடிவுகளை விளக்கி மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா பேசினார். உறுப்பினர் பதிவு குறித்து மாநிலச் செயலாளர் அசரப் அலி பேசினார்.

இக் கூட்டத்தில் தேசியக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் கிருஷ்ணன், மா.பெ.சுகுமாறன், வி.உதயக்குமார், வடசென்னை சுப்பிரமணி, இரா.மோ.சந்தோஷ்குமார், சு.பாஸ்கர், மு.தளபதி, ஆனந்தன், மதுரை மூர்த்தி, தஞ்சை கல்யாண சுந்தரம், பி.குணசேகரன், கள்ளக்குறிச்சி கோவிந்தராஜ், தேனி ராஜ்குமார், பி.பிரவீந்திரன், பி.ஞானவேல், திருச்சி சூர்யா, மார்க்சிம் கார்க்கி, கரூர் பாலன், தங்கவேல், அரியலூர் நாகராஜ், ராமநாதபுரம் செந்தில், கோவை சக்திவேல், நாமக்கல் ராமகிருஷ்ணன், கடலூர் லாரன்ஸ், தென் சென்னை கன்னப்பன் உட்பட மாநிலக்குழு உறுப்பினர்கள், அழைப்பாளர்கள் என முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஏப்.14ஆம் தேதி டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் சிறப்பாக கொண்டாடுவது,

மே.14ஆம் தேதி தேசியக்குழு முடிவின்படி தலித் மக்கள், மலைவாழ்மக்கள் மீதான அடக்குமுறைகளை தடுத்து நிறுத்த ஒன்றிய மோடி அரசை வலியுறுத்தி மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது,

வைக்கம் போராட்டத்தை நினைவுபடுத்தி நூற்றாண்டு விழாவை சென்னையில் ஜுன் மாதம் வெகுசிறப்பாக நடத்துவது என ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

# ஒன்றிய சட்ட அமைச்சரின் பேச்சுக்கு வழக்கறிஞர்கள் கண்டனம்!

Signatories To The Response By Lawyers To The Law Minister's Speech Dated March 18, 2023

| S.NO. | NAME | DESIGNATION | PRACTICING AT |
|---|---|---|---|
| SENIOR ADVOCATES | | | |
| 1. | Iqbal Chagla | Senior Advocate | Supreme Court |
| 2. | Raju Ramachandran | Senior Advocate | Supreme Court |
| 3. | Janak Dwarkadas | Senior Advocate | Bombay High Court. |
| 4. | Kapil Sibal | Senior Advocate | Supreme Court |
| 5. | Arvind Datar | Senior Advocate | Supreme Court |
| 6. | Rajinder Singh Cheema | Senior Advocate | P&H HC |
| 7. | Dushyant Dave | Senior Advocate, Former President SCBA | Supreme Court |
| 8. | Dr Abhishek Singhvi | MP & Senior Advocate | Supreme Court |
| 9. | Srihari Aney | Former Advocate General & Senior Advocate | Bombay High Court |
| 10. | Sriram Panchu | Senior Advocate | Supreme Court |
| 11. | Mihir Desai | Senior Advocate | Supreme Court |
| 12. | Chander Uday Singh | Senior Advocate | Supreme Court Of India |
| 13. | R. Vaigai | Senior Advocate | Madras High Court |
| 14. | Indira Jaisingh | Senior Advocate | Supreme Court |
| 15. | Shekhar Naphade | Senior Advocate | Supreme Court |
| 16. | Mihir Thakore | Senior Advocate | Gujarat High Court |
| 17. | Rasesh J Oza | Senior Advocate | Gujarat High Court |
| 18. | Percy Kavina | Senior Advocate | Gujarat |
| 19. | Anand Grover | Senior Advocate | Supreme Court |
| 20. | Anjana Prakash | Senior Advocate | Supreme Court |
| 21. | Huzefa Aziz Ahmadi | Senior Advocate | Supreme Court |
| 22. | Dhruv Mehta | Senior Advocate | Supreme Court |
| 23. | Rana Mukherjee | Senior Advocate | Supreme Court Of India |

“ஓய்வு பெற்ற நீதிபதிகள் சிலர் இந்திய எதிர்ப்புக் கும்பலை (anti-India gang) சேர்ந்தவர்கள்” என ஒன்றிய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசியிருப்பதற்கு கண்டனம் தெரிவித்து, உச்சநீதிமன்றம் மற்றும் பல்வேறு உயர்நீதிமன்றங்களைச் சேர்ந்த 320க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில், “நாட்டிற்கு எதிராக செயல்படுபவர்கள் அதற்குரிய விலையைக் கொடுப்பார்கள்” என அமைச்சர் ரிஜிஜு கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் மூலம், ‘எந்த எதிர்ப்புக் குரலையும் விட்டுவைக்க முடியாது’ என்ற செய்தியை ஒவ்வொரு குடிமகனுக்கும் ரிஜிஜு தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

“இப்படிப் பேசுவதும், மிரட்டுவதும் அமைச்சரின் உயர்பதவிக்குத் தகுந்தது அல்ல. அரசாங்கத்தை விமர்சிப்பது தேசத்திற்கு எதிரானது அல்ல; தேசபக்தியற்ற செயலும் அல்ல; இந்தியாவுக்கு எதிரானதும் அல்ல என்பதை அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.”

“அரசாங்கம் தேசம் அல்ல, தேசம் என்பது அரசாங்கம் அல்ல என்பதை அமைச்சர் ரிஜிஜு நினைவில் கொள்ள வேண்டும். அரசாங்கத்தில் பொறுப்பில் இருப்பவர்களைப் போலவே அரசை விமர்சிப்பவர்களும் தேசபக்தி கொண்டவர்கள் தான் என்பதைத் தயக்கமின்றி கூறுகிறோம். அரசியலமைப்புச் சட்டம் அரசை விமர்சிப்பதற்கான இடமாக நாடாளுமன்றத்தையோ அல்லது சட்டமன்றங்களையோ மட்டும் ஒதுக்கவில்லை; எந்தவொரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கானதாகவும் வழங்கவில்லை; வேறு யாரும் விமர்சிக்க கூடாது என தடை விதிக்கவும் இல்லை” என அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

“கருத்து மாறுபாடு கொள்வது ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள உரிமையாகும். எந்தவொரு அரசாங்கத்தையும் அதன் கொள்கைகள்; செயல்பாடுகளை விமர்சிப்பதும் அமைதியாக எதிர்ப்பதும் அடிப்படை மனித உரிமையாகும். இதனை அரசியலமைப்புச் சட்டமும் உறுதி செய்துள்ளது. அரசை விமர்சிக்கும் எந்தவொரு நபரின் தேசபக்தியையும் அரசின் உயர் பொறுப்பில் இருப்பவர்கள் களங்கப்படுத்துவதையும் அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரிக்கவில்லை.

முன்னாள் நீதிபதிகள், பொறுப்புள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் ஆளும் அரசியலுக்கு உடன்படக் கூடியதாக இல்லாவிட்டாலும், இதுபோன்ற மூர்க்கத்தனமான கருத்துக்களை வெளியிட அமைச்சருக்கு உரிமையில்லை. ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கு எதிரான இந்த அச்சுறுத்தல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. நீதித்துறை அமைப்புக்கும் நீதிபதிகளுக்கும் எதிராக மக்களைத் தூண்டிவிடும் தன்மையைக் கொண்டவை. எனவே அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.”

“நீ சொல்லுகின்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. இருப்பினும் அந்தக் கருத்தைப் பேச உனக்கிருக்கும் உரிமையை உயிரைக் கொடுத்தாவது காப்பேன்” என வால்டேர் கூறியிருப்பதை சட்ட அமைச்சருக்கு நினைவுபடுத்தாமல் இருக்க முடியாது. மற்றவர்களை விட சட்ட அமைச்சருக்கு இந்த வார்த்தைகள் எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும்” என அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த அறிக்கையில், துஷ்யந்த் தவே, கபில்சிபல், அபிஷேக் மனு சிங்வி, அரவிந்த் ததர், இக்பால் சாக்லா, ராஜு ராமச்சந்திரன், சி.யு.சிங், மீனாட்சி அரோரா, ஆர்.வைகை உட்பட 220க்கும் மேற்பட்ட உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

### அரசு தொகுப்பு வீடு கட்டித்தர கோரி

# கைத்தறி நெசவாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கம் ஏஐடியுசி சார்பில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. வீடு இல்லாத நெசவாளர்களுக்கு அரசு தொகுப்பு வீடு கட்டித் தரவும், மாதந்தோறும் 6 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் நிபந்தனையின்றி வழங்க வேண்டும், கைத்தறிக்கு என ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத் தறியில் புகுத்தாதே, கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை பாதுகாக்க முத்தரப்பு குழு அமைத்து கண்காணிக்க வேண்டும், கூட்டுறவு சங்க முறைகேடுகளை தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும், நலவாரிய பயன்கள் தாமதம் இன்றி கிடைக்க செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசை தமிழ்நாடு கைத்தறி சம்மேளனம் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கைகளை முன்வைத்து காஞ்சிபுரத்தில் மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைவர் எஸ்.வி.சங்கர் முன்னிலை வகித்தார்.

மாவட்ட துணை செயலாளர் எல்.தங்கராஜ் துவக்கி வைத்தார். பி.வி.சீனிவாசன், டி. கங்காதரன், எம்.காவேரி, பாண்டியன், பாஞ்சாலை கோபி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டம் நிதியளிப்பு பேரவை



மயிலாடுதுறை மாவட்டம் நிதியளிப்பு பேரவை மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் இன்றைய அரசியல் சூழல் குறித்து மாநில செயலாளர் இரா. முத்தரசன் கருத்துரை ஆற்றினார். கட்சி நிதியினை மாவட்ட செயலாளர் கொடுக்க மாநில செயலாளர் இரா.முத்தரசன் நிதியினை பெற்றுக் கொண்டார். ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட நிர்வாக குழு தோழர்கள், கிளை செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# ஜி.எஸ்.டி. பில்லில் குறைதேடும் அதிகாரிகள்

### கோவை தொழில் அமைப்பான போசியா கண்டனம்

ஜி.எஸ்.டி. மூலம் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து தொழில் துறையினர் அரசிடம் எடுத்துக் கூறியும் எவ்விதமான நடவடிக்கை இல்லாதது குறு சிறு தொழில்களை முடக்கி வருகின்றன. அதிகாரிகள் ஜி.எஸ்.டி. பில்லில் உள்ள சிறு, சிறு குறைகளை கண்டறிவதும், அதற்காக பல லட்சங்கள் அபராதம் விதிப்பதும் தொழில் துறையில் பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. அருகாமையில் இருக்கக் கூடிய எடை மெஷின் வெயிட் பார்த்து பில் போடுவதாக சென்றால் கூட, ஈ வே பில் போடவில்லை என்று சொல்லி அபராதம் விதிப்பதும், பில்லில் ஏற்படுகின்ற சின்ன, சின்ன எழுத்து பிழைக்கும் கூட அபராத விதிப்பதும், கம்பெனி பகுதியில் அதிகாரிகள் வட்டம் இடுவதும், வாகனங்களை மறித்து அபராதம் விதிப்பதுமாக தொடர்ந்து தொழில்களை முடக்கி வருகின்றார்கள்.

தமிழகத்தில் அதிகாரிகளின் இந்த நடவடிக்கை திட்டமிட்டு குறு, சிறு தொழில்களை முடக்குவதாக உள்ளது. கோவை மாவட்டத்தில் பல்வேறு மாநிலங்களில் இருந்து எண்ணற்ற பொருள்கள் பில் இல்லாமல் வடமாநில பொருட்கள் விற்பனை செய்வதும், கோடிக்கணக்கில் ஜி.எஸ்.டி. பில் போடாமல் நடக்கின்றது. அதையெல்லாம் பிடிக்காமல், தவறி விட்டு முறையாக தொழில் செய்து கொண்டிருக்கின்ற உற்பத்தி துறைக்கு நெருக்கடி கொடுப்பது என்பது கடுமையான பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது என்பதை தமிழக அரசுக்கு கோவை தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பான போசியா சுட்டிக் காட்டுகிறது. இது சம்பந்தமாக துறை சார்ந்த அதிகாரிகளை சந்தித்து முறையிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

### இராஜபாளையம் நகராட்சி

# சொத்து வரி உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




இராஜபாளையம் நகராட்சி அலுவலகம் முன்பு சொத்து வரி உயர்வைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நகர செயலாளர் விஜயன் தலைமை வகித்தார். தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி., ஒன்றிய செயலாளர்கள், கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், இளைஞர்மன்ற பகத்சிங் ஆகியோர் பேசினர். ஆர்ப்பாட்டம் முடிவில் நகராட்சி ஆணையாளரிடம் மனு அளிக்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 113. நிட்டூரம் பேசேல்

**கட்டின வீட்டுக்கு நிட்டூரம் பேசுதலாம்**
**வெட்டிக்குப் பேசுமப் பேச்சு**

பொழுது போவதற்கெனப் பேசும் வெட்டிப் பேச்சு, கட்டி முடிக்கப்பட்ட வீட்டைப் பார்த்து, ‘அப்படிக் கட்டியிருக்கலாம்; இப்படிக் கட்டியிருக்கலாம்’ என்று சொல்வது போன்ற வீண் வேலை.

**குத்திக்குத்தி பேசும் அவனால் குணம்பல**
**அக்குபிக்கு கொள்ளா அற.**

மற்றவர் மனதைப் புண்படுத்திப் பேசுபவனிடம் நல்ல குணங்கள் அற்றுப் போகும். (அஃகு பிக்கு – பேச்சு வழக்கு).

# ஒன்றிய அரசின் கொள்கை: உச்சநீதிமன்றம் சாடல்



அருண் நெடுஞ்செழியன்

**ஒன்றிய அரசின் கொள்கைகள் மீதான விமர்சனங்கள் தேசப் பாதுகாப்பிற்கு எதிரானது ஆகாது என மீடியா ஒன் ஊடகத்தின் மீதான ஒன்றிய அரசின் தடையை ரத்து செய்து அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது உச்ச நீதிமன்றம்.**



மீடியா ஒன் தொலைக்காட்சி அலைவரிசையானது கேரள மாநிலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது.இந்த அலைவரிசையை 'மத்யமம்' என்ற ஒலிபரப்பு நிறுவனம் நடத்தி வந்தது. 10 ஆண்டுகளுக்கு முன்பாக மீடியா ஒன் அலைவரிசை பெற்றிருந்த உரிமம் கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பரில் காலவதியாகியதைத் தொடர்ந்து, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடம் ஒலிபரப்பு உரிமையை புதிப்பிக்க விண்ணப்பித்திருந்தது

இந்நிலையில் மீடியா ஒன் அலைவரிசைக்கு உரிமை வழங்க மறுத்த மத்தியதகவல்மற்றும்ஒலிபரப்பு அமைச்சகம், அனுமதிக்கப்பட்ட அலைவரிசைகளின் பட்டியலில் இருந்தும் மீடியா ஒன்னை நீக்கியது.தேசத்தின் பாதுகாப்பு கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, மத்திய அரசு தெரிவித்தது.

அலைவரிசைநிறுவனம்சார்பாக,ஒன்றிய அரசின் தடைக்கு எதிராக கேரளா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த கேரளா உயர் நீதிமன்றமோ மத்திய அரசின் முடிவை ஏற்று மீடியா ஒன் சேனலின் மனுவை தள்ளுபடி செய்தது.

பிறகு கேரள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக நிறுவனம் தரப்பிலும், கேரள பத்திரிக்கையாளர்கள் சங்கத் தரப்பிலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டன. இது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட், நீதிபதி ஹிமா கோலி ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று வழக்கின் தீர்ப்பை வழங்கியது.

நாட்டின்ட்டின் பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி கேரளா உயர்நீதிமன்றம் நியாயப்படுத்தியதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்தனர்.

நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் பொதுமக்களின் அடிப்படை உரிமையை மறுக்க கூடாது என உச்சநீதிமன்ற நீதிபதிகள் அரசின் நிலைப்பாட்டை விமர்சித்தனர்

“அரசு அதிகாரம் குறித்து உண்மையை பேசுவதும் குடிமகன்களுக்கு உண்மை நிலைமையை கூறுவதும் ஊடகத்தின் கடமையாகும்.நாட்டின் சமூகப் பொருளாதாரம்,அரசியல் சித்தாந்த்த போன்ற பிரச்சனைகள் குறித்தெல்லாம் ஒற்றைப் பட்டையான கருத்துக்கள் மட்டுமே பேச வேண்டும் எனக் கருதுவது நாட்டின் ஜனநாயகத்திற்கு புதை குழி வெட்டுகிற செயலாகும் என தனது 134 பக்க தீர்ப்பில் ஒன்றிய அரசின் ஊடக சர்வாதிகார போக்கு குறித்து கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளனர்.

தீர்ப்பில் மேலும் கூறியதாவது

“தீவிரவாத தொடர்புடைய ஜமாத் இ இஸ்லாமி அமைப்புடன் மீடியா ஒன் நிறுவனத்திற்கு தொடர்பு உள்ளது என்ற மத்திய புலனாய்வு அமைப்பின்(IB) குரச்சாட்டுகளின் பேரில் மீடியா ஒன் நிறுவனத்திற்கு தடை விதிப்பதாக ஒன்றிய அரசு கூறுகிறது.மேலும் இது பற்றிய செய்திகள் வெளியே கசிந்துவிடக் கூடாது என சீலிடப்பட்ட கவரில் அரசு பதில் கூறுகிறது.இதில் முரண் என்னவென்றால் 1994 ஆண்டிலயே இந்த அமைப்பிற்கு தீவிரவாத தொடர்பேதும் இல்லை என உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது.

ஊபா (Unlawful Activities Prevention Act,) சிறப்பு ஆயுதப் படை சட்டம்,குடியுரிமைத் திருத்த சட்டம்,பாபர் மசூதி இடித்த அமைப்பு மீது அரசு மென்மையாக நடந்துகொள்வது ஆகிய விஷயங்கள் குறித்து மீடியா ஒன்னின் விமர்சனங்கள் நாட்டின் பாதுகாப்பு படை மீதும் நீதிமன்ற அமைப்பு மீதும் மோசமான பார்வையை உருவாக்குகிற என்கிறது ஒன்றிய அரசு.

ஆனால்விஷயமென்னவென்றால்,மீடியா ஒன் நிறுவனம் மீதான மத்திய புலனாய்வு அமைப்பின் குற்றச்சாட்டுகளே தவறான ஆதாரத்தின் பேரில் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் புலானாய்வு அமைப்பின் தகவல்கள் அனைத்தும் பொதுமக்கள் பார்வைக்கு படும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.இந்த நிலையில் ஒன்றிய அரசு சீல் வைக்கப்பட்ட பதில் வழங்குவது ஏற்படையது அல்ல என விமர்சித்த நீதிபதிகள்,மீடியா ஒனநிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லாதவை எனக் கூறி தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அடுத்து நான்கு வாரத்திற்குள் மீடியா ஓன் நிறுவனத்திற்கு ஒலிபரப்பு நீட்டிப்பு உரிமையை வழங்கவேண்டும் என உத்தரவிட்டது.

மோடியின் நண்பர் என நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ராகுலால் அழைக்கப்படுகிற அதானி அண்மையில் NDTV ஊடகத்தை வாங்கினார்.அதானியின் பங்குச் சந்தை மோசடி முதலாக வங்கியின் வாராக் கடனில் சிக்கிய அதானியிடம்,மத்தியில் ஆளும் பாஜகவும்அதன் தலைவர் மோடியும் அனுசரணையாக இருக்கிறார் என்ற குற்றச்சாட்டு இன்று நாட்டின் தலைப்புச் செய்தியாக உள்ளது.

இந்நிலையில் நாட்டை சூறையாடும் முதலாளி ஒருவர் முக்கிய ஊடகத்தை கைப்பற்றுவது நாட்டின் பத்திரிக்கை சுதந்தரத்தை எப்படி காக்கும்? இக்காரணத்தினால் அண்மையில் NDTV –ல் இருந்து திரு ரவீஸ் குமார் பதவி விலகினார். அதைப்போலவே மோடியின் இன்னொரு நண்பர் என எதிர்க் கட்சிகளால் அழைக்கப்படுகிற அம்பானி ,மோடி பதவி ஏற்றதும் Network 18 நிறுவனத்தை வாங்கியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பாஜக ஆட்சிக்கு வந்தபின்னர் பெரு முதலாளிகள் ஊடகத்தை கைப்பற்றுவதும், சுதந்திரமாக செயல்படும் ஊடகத்தை மிரட்டி அச்சுறுத்தி பணிய வைப்பதும் பொதுப் போக்காக கொண்டுள்ளது. இது பாசிஸ்ட்களின் பாணி ஆகும்.

இத்தகைய இருண்ட சூழலில். ஊடகங்கள் மீதான மோடி அரசின் பாசிஸ்ட் போக்கை மீடியா ஒன் வழக்கு மீதான தீர்ப்பின் மூலமாக உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது பாராட்டுதலுக்கு உரியது.

**தொடர்புக்கு: 8825425912**

# கோபுரத்துக்கு போன குப்பை



ஊழலுக்கு அப்பாற்பட்ட ஊழல் ஒழிப்பாளிபோல் ஓங்கிக் குரல் கொடுக்கிறார் மோடி!

இந்து ஐதீகப்படி, காலம் கலிகாலமல்லவா?

குப்பையில் கிடக்க வேண்டியவை கோபுரத்திற்குப் போய் ஒட்டிக்கொண்டு இருக்கிறது!

சத்தியத்தையும், நேர்மையையும் கொன்று குழிதோண்டிப் புதைக்கும் கொடுங்கோலர், சத்தியசீலராக வலம்வருகிறார்! வாய் நீளம் காட்டுகிறார்! கலிகால நிகழ்வுகளை மெய்ப்பித்துக்காட்டுகிறார் மோடி!?

ரஃபேல் பேரத்தில், ஊழல் நடந்த உண்மையைப் புட்டுப்புட்டு வைத்தபோது, நேர்மையான விசாரணையை எதிர்கொள்ள அஞ்சி ஓடியதேன்?

ஆட்சிஅதிகாரத்தைப்பயன்படுத்தி, பல ஆயிரங்கோடிகளை வசூல் செய்து குவித்துக்கொண்ட றிவி கேர் நிதி விபரத்தை, அதன் செயல்பாடுகளை நாட்டிற்கு அறிவிக்க மறுத்து மறைப்பது ஏன்?

அதானியின் முறைகேடுகளை, அவரோடு மோடிக்கு உள்ள உறவின் ஆழத்தைப் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க மறுத்து, நாடாளுமன்ற நடவடிக்கைகளையே முடக்கி நாசப்படுத்தியது ஏன்?

ராகுல் காந்தி எழுப்பிய ஒரு வினாவிற்குக் கூட பதிலளிக்காமல் பயந்து, அதிகாரத்திற்குப்பின்னால் பாதுகாப்பாகப் பதுங்கிக் கொண்டது ஏன்?

2014ல் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர், பல ஆயிரங்கோடி நிதி பாஜகவிற்கு குவிந்து வருகிறதே எங்கிருந்து, யாரால், எதற்காக வழங்கப்பட்டது?

தமிழ்நாட்டில், மாவட்டவாரியாக பல இலட்சங்களில் கட்டிடம் கட்டுகிறார்களே எங்கிருந்து வந்தது நிதி?

எந்த ஊர்களில் எந்தெந்த வீதிகளில் உண்டி குலுக்கினார்கள்?

எந்தெந்த ஊர்களில் வீடு வீடாக வசூல் செய்தார்கள்?

இலட்சுமி கடாட்ச்சமா இது !

சிலரை சில காலம் ஏமாற்றலாம்!

பலரை பல காலம் ஏமாற்றலாம்!

எல்லோரையும் எல்லாக் காலங்களும் ஏமாற்றமுடியாது!

பொய் பேசும் நாக்கு அழுகிப்போகாது என்பதால் பொய்யைத் தவிர வேறு எதையும் அவர் நாக்கு பேசுவதே இல்லை!

**–கே.சுப்பராயன் எம்.பி.,**




? மேல்முறையீடு செய்ய ராகுல் காந்தி சூரத் சென்று இருக்கிறார். மேல்முறையீட்டுக்காக தானே நேரில் செல்வது தேவையில்லாத நாடகம்

**– ஒன்றிய அரசின் சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு**

! தன் சொந்த அம்மாவை பார்ப்பதற்கு உள்வீடு வரை கேமராவோடு மோடி சென்றது தான் தேவையான நாடகமோ!

◆◆◆

? தமிழ்நாட்டில் பாஜக ஆட்சிக்கு வந்தவுடன் இந்து சமய அற நிலையத் துறையை கலைக்கும் உத்தரவில் முதல் கையெழுத்து போடப்படும்

**– பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை**

! புதுச்சேரியில் பாஜக கூட்டணி அரசு தானே நடக்கிறது. அங்கு திருநாள்ளாறு கோவிலில் இருந்து அறநிலையத்துறையை வெளியே போக சொல்லட்டுமே! கர்நாடக மாநிலத்தில் பா.ஜ.க. தானே ஆட்சி நடத்துகிறது. அங்கு உடனடியாக கலைத்து உத்தரவு போடட்டுமே! கோவில் சொத்துக்கள் கொள்ளை போவதைப் பார்த்து இந்து சமய அறநிலையத்துறையை அமைத்தது நாத்திகர்கள் அல்ல;நாத்திகர்களை முழுமையாக எதிர்த்த பழுத்த ஆத்திகரான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தான்!

**– ஆன்மீக சொற்பொழிவாளர் சுகி சிவம்**

? நாடு வல்லரசாக வேண்டும் எனில் முதலில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்ய வேண்டும். மதத்தை அரசியலுக்கு பயன்படுத்தாமல் இருந்தால் வெறுப்பு பேச்சு காணாமல் போய்விடும். அரசியலும் – மதமும் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும். அதுதான் தீர்வாக அமையும். சக மனிதர்களின் கண்ணியத்துக்கு முதலில் மதிப்பு கொடுக்க வேண்டும்.

**– ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை**

! 2024ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறோம். பா.ஜ.க.வினரின் மேஜையில், வகுப்புவாத வன்முறை, வெறுப்பு பேச்சுகள், சிறுபான்மையினரோடு மோதல், அமலாக்கத்துறை, சிபிஐ, தேர்தல் ஆணையம் ஆகியவற்றின் மூலம் எதிர்க்கட்சிகளை குறிவைத்தல் என எல்லா ஆயுதங்களும் தயாராக உள்ளன.

**– முன்னாள் அமைச்சர், காங்கிரஸ் எம்.பி., கபில் சிபல்**

◆◆◆

? ‘எனது மூளையை கழற்றி வீட்டில் வைத்துவிட்டுதான் தென்னிந்திய படங்களின் படப்பிடிப்புக்கு செல்வேன். ஜிம் பாடியான என்னை, வலுவிழந்த ஹீரோ அடித்து உதைப்பதை நான் சகித்துக்கொண்டுதான் ஆக வேண்டும்‘.

**– தமிழ் படங்களில் நடிக்கும் இந்தி நடிகர் ராகுல் தேவ்**

! ‘இது ஒரு இனவாத கமன்ட். வட இந்திய ஹீரோக்கள் ஒத்தையாக நூறு பேரை அடிப்பதில்லையா? சீறி வரும் ஆயிரம் துப்பாக்கி வேட்டுக்களையும் தாண்டிக் குதித்து உயிரோடு தப்பி டைவ் அடித்து ஓடுவதில்லையா? என்னடா கதை அடிக்குறீங்க. அப்ப ஒங்க மூளை எங்கன போச்சு?’

**– யமுனா ராஜேந்திரன்.**



1ம் பக்க தொடர்ச்சி

சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து உள்ளிட்ட மாநில நிர்வாக குழு உறுப்பினர்களும்...

இளைஞர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் உ.சிவாஜிகாந்தி, மாநிலத்துணைத் தலைவர்கள் கு.ராஜேந்திரன், மோ.வெங்கடேசன், மாநிலத் துணைச்செயலாளர்கள் துரை. அருள்ராஜன், வே.வசந்தகுமார், இரா. தமிழ்பெருமாள், மாணவர் மாநிலத்தலைவர் சீ.தினேஷ் சீரங்கராஜ், மாநிலசெயலாளர் பா.தினேஷ் உள்ளிட்ட மாநில நிர்வாக குழு உறுப்பினர் மற்றும் மாவட்ட செயலாளர்கள் மாவட்டத்தலைவர்கள் உள்பட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கொட்டும் மழையிலும் கலந்து கொண்டு எங்கே எனது வேலை? என முழக்கமிட்டனர்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, புறநகர் மாவட்டசெயலாளர் எஸ்.ராஜ்குமார், இளைஞர் பெருமன்ற திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எம்.செல்வக்குமார், திருச்சிமாநகராட்சிகவுன்சிலரும்ஏ.ஐ.டியூசி மாவட்ட பொதுச் செயலாளருமான எம்.சுரேஷ், தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், விவசாயிகள் சங்க மாநிலத் துணைச் செயலாளர் த.இந்திரஜித் ஆகியோர் தலைமையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் திருச்சி புறநகர் மாவட்ட அமைப்பாளர் எம்.தமிழரசன் நன்றிகூறினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன

### வேலை கிடைப்பதை உத்திரவாதம் செய்க!

உலகின் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு, இந்தியா. பல்வேறு கனவுகளோடும், லட்சியங்களோடும், எதிர்பார்ப்புகளோடும் வாழ்க்கையை துவங்க நினைக்கும் இளைஞர் சமுதாயம், வேலையின்மை என்ற கொடிய நோயால் அவதியுற்று வருகிறது. வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கி, அனைவருக்கும் வேலை கிடைப்பதை அரசு உத்தரவாதப்படுத்தினால்தான் இந்நோயை குணப்படுத்த முடியும்.

### ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையை நீக்குக!

பாஜக அரசின் பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் 50 லட்சம் பேர் வேலையிழந்தனர். ஜி.எஸ்.டி. வரி விதிப்பின் உள்ளடக்கம் சாமானியர்களுக்கு அதிக வரி விதிப்பதாகவும், முதலாளிகளுக்கு வரிச் சலுகை வழங்குவதாகவும் அமைந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகின்றன. அக்னிபாத் என்ற பெயரில் இராணுவத்திலும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் முறையை புகுத்திவிட்டனர். அனைத்து துறைகளிலும் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறை கோலோச்சுகிறது.

### விவசாயத்தைப் பாதுகாத்திடு!

விவசாய உற்பத்திப் பொருட்களை மதிப்பிழக்கச் செய்ததானது, பொருளின் விலையைவிட உற்பத்தி செலவை உயர்த்திவிட்டது. இதனால் விவசாயம் அழிக்கப்பட்டு, அதை நம்பி வாழ்ந்துவந்த பல கோடிக்கணக்கான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் புலம்பெயர் தொழிலாளர்களாக மாற்றப்பட்டுவிட்டனர்.

கல்விக் கடன் தள்ளுபடி

கடந்த 9 ஆண்டு கால பாஜக ஆட்சியில், கார்ப்பரேட் நிறுவனங்களின் 10 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் கடன்கள் வலுக்கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது. மாணவர்களின் கல்விக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்.

### பெண்களுக்கான வேலையை உறுதி செய்!

பாஜக அரசின் இப்படிப்பட்ட நவ தாராளமய பொருளாதாரக் கொள்கைகளால் விலைவாசி உயர்ந்து வருகிறது; வாழ்வாதாரத்திற்கான செலவினங்கள் கூடுதலாகிவிட்டது. மக்களின் வாங்கும் சக்தி குறைந்ததால், பொருளாதார தேக்க நிலை ஏற்பட்டதால், வேலையிழப்புகள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பெண்களே வேலையிழந்தவர்களாகவும், வேலை கிடைத்தாலும் வேலைக்கேற்ற ஊதியம் மறுக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

### காலி இடங்களை நிரப்பு

வேலையில்லா திண்டாட்டம் ஒருபுறமிக்க, ஒன்றிய அரசின் துறைகளில் சுமார் 50 லட்சம் இடங்களும், மாநில அரசின் துறைகளில் சுமார் 5.5 லட்சம் இடங்களும் காலியாக உள்ளன. இரு அரசுகளும் இவற்றை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை.

### ஆட்குறைப்பு செய்யாதே!

தொழில்நுட்ப வளர்ச்சியாலும், செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியாலும், அனைத்தும் இயந்திரமாக்கப்பட்டு வருகிறது; மனிதர்களின் வேலையை இயந்திரம் மேற்கொள்கிறது. இதனைப் பயன்படுத்தி, ஐ.டி. நிறுவனங்கள் தீவிர ஆட்குறைப்பு வேலையில் ஈடுபட்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியை நாங்கள் எதிர்க்கவில்லை. பெரும் நிறுவனங்கள் லாபத்தை மேன்மேலும் குவிப்பதற்காக தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம்.

### கலவரங்கள் மூலம் மக்களை திசைதிருப்பாதே!

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடுகள் குறைந்து வருகிறது. தேசிய கல்விக் கொள்கையின் மூலம் கல்வியைப் பறித்து, நுழைவுத் தேர்வுகள் மூலம் வேலைவாய்ப்புகளையும் பறித்து, சாதிக் கட்டமைப்பை பாஜக அரசு மறு நிர்மாணம் செய்து வருகிறது.

இதற்கு எதிராக, மக்களிடம் கலகக் குரல் எழாத வகையில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங் பரிவார் அமைப்புகளால் சாதி, மதக் கலவரங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மதவெறுப்பு பிரச்சாரங்கள், போலி தேசியவாதம் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி மக்களை திசை திருப்பி வருகிறார்கள்.

### போதைக்கு அடிமையாக்காதே!

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடும், செயல்பாடுகளும் போதுமானதாக இல்லை. பாஜக அரசின் நவ தாராளமய கொள்கைகளை கடைபிடிப்பதில், தி.மு.க. அரசின் செயல்பாடுகள் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது. மாநில அரசு ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையினை கைவிட வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்கள் நீர்த்துபோகச் செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.

முறையான கல்வி, வேலை மறுக்கப்பட்ட, போதைப் பொருளுக்கு அடிமையான ஒரு இளைஞர் தலைமுறை உருவாக்கப்பட்டு வருகிறது. இது தடுக்கப்பட வேண்டும்.

வேலையின்மைக்கு தீர்வு காண, வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்புச் சட்டத்தை (ஙிழிணிநிகி) நிறைவேற்ற வேண்டும்.

வேலை கொடு அல்லது வேலை கொடுக்கிற வரை மாதம் 10 ஆயிரம் நிவாரணம் கொடுக்க வேண்டும்.

ஒன்றிய மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும்.

புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு வேலை வாய்ப்புகளில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கு வேண்டும்.

வேலை வாய்ப்புக்களில் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையினை ரத்து செய்து, நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்திட வேண்டும்.

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியமாக 21ஆயிரம் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 45 வயதுக்குள் இறந்து விடுவோர் குடும்பத்திற்கு 25லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க சட்டம் நிறைவேற்ற வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என 'ஒன்றிய அரசே! மாநில அரசே! எங்கே எனது வேலை' எனக்கேட்டு நடைபெறும் இளைஞர் எழுச்சி மாநாடு ஒன்றிய, மாநில அரசுகளை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.






JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 08.04.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




## மூத்த அரசியல்வாதியின் மரண வாக்குமூலம்



"நரேந்திர மோடி பிரதமர் ஆவதற்கு ஆதரவு அளித்ததற்காக, பிரச்சாரம் செய்ததற்காக நான் இந்திய மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திர இந்தியாவில் இப்படி ஒரு ஏமாற்றுக்காரர் இதுவரை பிரதமராக ஆனதே கிடையாது! என் வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் இருக்கிறேன். மரண வாயிலில் நிற்கிறேன். எனக்கு வயது 93. பெட்டி படுக்கை எல்லாம் கட்டி வைத்துவிட்டேன். இந்த உலகத்தை விட்டு புறப்பட ஆயத்தமாகிவிட்டேன்.

அப்படி நான் போவதற்கு முன்பு, இந்த நரேந்திர மோடி கூட்டம் இனி மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடக்கூடாது என்பதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அத்தனை வழிகளிலும் போராடுவேன்.

**பாஜகவின் முன்னாள் அமைச்சரும் உச்சநீதிமன்ற பிரபல வழக்கறிஞருமான ராம்ஜெத் மலானி**

# காவிரி படுகை பகுதியில் நிலக்கரி சுரங்கமா?

# ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

**பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தமிழ்நாடு அரசு தலையிட்டு ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளி யிட்டுள்ளது.**



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயக்குழு சார்பில் மாநில செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடலூர் மாவட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மூன்று நிலக்கரி சுரங்கங்களை அமைத்து செயல்பட்டு வருகிறது. இந்த நிலக்கரி சுரங்கங்களுக்கு வேளாண் நிலங்களை வழங்கிய விவசாயிகள் அதற்குரிய இழப்பீடும், மறுவாழ்வுக்கான ஏற்பாடும் இல்லாமல் அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர். விவசாயத் தொழிலாளர்கள் வேலையிழந்து புலம் பெயர்ந்து சென்று சொல்லவொணாத் துயரத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் காவிரி படுகைப் பகுதியில் படிப்படியாக தொடர்ந்து மேலும் ஆறு நிலக்கரி சுரங்கங்கள் அமைக்கும் திட்டம் இருப்பதாக வெளியாகியுள்ள செய்தி ஒட்டுமொத்த டெல்டா பகுதியினையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளதுடன் கடுமையான பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

கடந்த 2020 பிப்ரவரி மாதம் காவிரி படுகை பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது. அப்போது அப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பது தொடர்பான, ஒன்றிய அரசு நடத்தி வரும் ஆய்வுகளை தடுக்க இயலாது என அ.இ.அ.தி.மு.க. அரசு கூறிவிட்டது. இப்போதும் ஆய்வுப் பணி நடப்பதால், சுரங்கம் அமைக்க அனுமதி கொடுத்து விட்டதாக கருதக் கூடாது என்று விளக்கம் அளிக்கப்பதும் குழப்பம் ஏற்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கை திருச்சி முதல் நாகை வரை ரூ1000 கோடி செலவில் வேளாண் தொழில் பெருந்தடம் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த நிலையில் நிலக்கரி சுரங்க திட்டத்திற்கு சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் வரை நிலம் கையகப்படுத்தபடும் என்ற செய்தி. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வில் விழுந்த பேரிடியாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு விரைந்து செயல்பட்டு காவிரி படுகை பகுதியில் சுரங்கம் அமைக்கும் பணிகளுக்கான ஆய்வுப் பணிகளும் நடக்காமல் தடுக்க வேண்டும். இது தொடர்பாக ஒன்றிய அரசுக்கு வலுவாக அழுத்தம் தர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.